# திருக்கல்யாணத்தாய்


**www. thirukalyanamatha.com**தொலைபேசி : 04639 - 261230

**kalyanamatha@gmail.com**



ஆசிரியர் & வெளியிடுபவர்
அருட்திரு **பபியான் ஜோசப்**

ஆலோசகர் குழு
அருட்திரு. **ஜாண் போஸ்கோ**
அருட்திரு. **சிலுவை தங்கம்**
அருட்திரு. **டென்சில் ராஜா**
அருட் சகோதரி. **புளோரா**

ஆசிரியர் குழு
அருட் சகோதரி. **மைக்கிள்**
திருத்தொண்டர்.**டேவிட் வளன்**
திரு. **ஜெயசீலன் அந்தோணிராஜ்**
திரு. **அந்தோணி ஜெயராஜ்**
திரு. **பெலிக்ஸ் அந்தோணி**
திரு. **ஜோசப் ததேயூஸ் ராஜா**
திருமதி. **ரெவின்யூஸ் ராணி**
திரு. **மெசியாஸ்**

விளம்பரம்செய்ய தொடர்புகொள்ள
04639-261330
04639-261230



தொடர்பு முகவரி
பங்குத் தந்தை
திருக்கல்யாண மாதா ஆலயம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230


## மலரின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 2 |
| திருத்தல வரலாறு 1935-2013 | 5 |
| திருத்தலம் உருவாக்கிய சிற்பிகள் | 8 |
| திருச்சபை செய்திகள் | 10 |
| மறைமாவட்ட செய்திகள் | 11 |
| பங்குச் செய்திகள் | 12 |
| திருத்தல தலைப்புச் செய்திகள் | 15 |
| திருத்தல அறிவிப்பு கல்வெட்டு | 17 |
| முதற்சனி வழிபாடுகள் | 19 |
| திருத்தல தேர்ப்பவனியின் மகிமை | 23 |
| திருக்கல்யாண மாதாவின் திருமணம் | 25 |
| பொற்பை நாயகியின் சிலுவை மகிமை | 35 |
| திருமணம் & குழந்தை வரம் தரும் தாய் | 37 |
| திருத்தலப் பள்ளிகளின் வரலாறு | 38 |
| விவிலிய நூல்களும் அர்த்தங்களும் | 41 |
| மாதா காட்சி கொடுத்த செய்திகள் | 43 |
| புனித ஜோன் ஆப் ஆர்க் | 44 |
| வாழ்வு தரும் வார்த்தைகள் | 46 |
| விவிலிய குறுக்கெழுத்துப்போட்டிகள் | 47 |
| திருத்தல வழிபாடுகள் | 48 |



# வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**ஆண்டு சந்தா ரூ. 100**

இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!



# ஆசிரியரின் அருளுரை

**மனநிறைவுடன் மடல்!**

கிறிஸ்து இயேசுவில் பிரியமானவர்களே! பங்குத்தந்தை என்ற முறையில் திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பங்கு வரலாற்றைப் புரட்டிப் பார்த்து பெருமையுடன் உங்களுக்காக வரையும் மடல்!

**23.01.1924 ல் ஆலயம் தோற்றமானது.** 1935 ம் ஆண்டு தனிப்பங்காக, **மேதகு. திபூர்சியூஸ் ரோச் ஆண்டகை** அவர்களது காலத்தில் உருவானது. கடந்த 90 ஆண்டுகளில் பொற்பை மக்களின் ஆன்மீக ,சமூக , பொருளாதார முன்னேற்றங்களை எண்ணி வியப்படைகிறேன்! குறிப்பாக கடந்த பல ஆண்டுகளில் விசுவாச வாழ்வில் நாம் எடுத்து வரும் எழுச்சி மிக்க முயற்சிகள், கடவுளின் கொடைகளை பெற்றுக்கொள்ள ஒரு வடிகாலாக அமைந்துள்ளது! இந்த கொடைகளை பெற நம்மை வழிநடத்திய **முன்னாள் ஆயர்கள், பங்குத்தந்தையர்கள்,அருட்சகோதரிகள்** மற்றும் **பொதுமக்களை** நன்றியோடு நினைவு கூர்ந்து ஜெபங்களை அர்ப்பணிப்போம்! இப்பேர்பட்ட பரிணாம வளர்ச்சியில் இணைந்து ஜெபித்து இணைந்து பணி செய்ய ஆண்டவர் நம்மை தொடர்ந்து ஆசிர்வதித்து வருகிறார். அப்படிப்பட்ட பெருமைக்குரிய வளர்ச்சியில் **முதல் சனி வழிபாடுகள்** இமயம் தொடும் அளவிற்கு வளர்ந்து வருவதை எண்ணி மனநிறைவடைகிறேன்!

அந்த நிறைவின் பயனாக, திருக்கல்யாணத்தாய் இன்னும் நம்மை சிறப்பாக ஆசீர்வதிக்கும் வகையில், **12.05.2013 அன்று நம் ஆலயம் திருத்தலமாக மாறுகின்றது!** இந்த வரலாற்றுச் சிறப்பை எண்ணி நான் பூரிப்படைகிறேன்! எல்லாம் வல்ல இறைவனுக்கும், திருக்கல்யாண அன்னைக்கும் மற்றும் அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறி, வாழ்க வளமுடன் என வாழ்த்தி இந்த மடலை மனநிறைவுடன் சமர்ப்பிக்கின்றேன்!

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

**12.05.2013.**

**பங்குத் தந்தை**

பொத்தக்காலன்விளை.

# ஆயர்களின் வாழ்த்துச்செய்திகள்



மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியூஸ்
கோட்டாறு

பொத்தக்காலன்விளை திருக்கல்யாண மாதா ஆலயம் திருத்தலமாக அறிவிக்கப்பட்ட இந்நன்னாளில் பங்குத்தந்தை, அருட்பணியாளர்கள், பங்கு மக்கள், பக்த சபையினர் அன்னையின் அகில உலக பக்தர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். ஆன்மீக சிந்தனைகளில் நிலைத்திருந்து இறையாசீரை நிறைவாய் பெற்றிடுங்கள். திருக்கல்யாண அன்னையின் ஆசீர் உங்களோடு என்றும் தங்கி இருப்பதாக.



மேதகு ஆயர் ஜூடு பால்ராஜ்
பாளையங்கோட்டை

பொத்தக்காலன்விளை திருக்கல்யாண மாதா ஆலயம் மறைமாவட்ட ஆயர் அவர்களால் திருத்தலமாக அறிவிக்கப்பட்டதை அறிந்து மகிழ்ச்சி கொள்கிறேன். அன்னையின் ஆலயம் திருத்தலமாக அறிவிக்கப்பட்ட இந்த நாளிலிருந்து இன்னும் புத்துணர்ச்சியோடு பங்குத் தந்தையோடு அனைவரும் ஒன்றிணைந்து திருக்கல்யாண அன்னையின் புகழ் உலகில் உள்ள மக்கள் அனைவரும் அறியச் செய்யவும் சிறந்த ஒரு முன்மாதிரியான பங்காக உருவாக உழைக்குமாறு அன்புடன் வாழ்த்துகிறேன்.



மேதகு ஆயர் அந்தோனி டிவோட்டா
திருச்சி

வரலாற்று சிறப்புமிக்க பொத்தக்காலன்விளை திருக்கல்யாண மாதா ஆலயம் திருத்தலமாக அறிவிக்கப்பட்ட இந்நாளில் பங்குத் தந்தை பங்கு மக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன். அன்னையின் அருளால் இன்னும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்வில் எல்லா வளமும், நலமும் பெற்று அன்னைக்கு சாட்சிகளாக வாழ்ந்திட அனைவரையும் வாழ்த்துகிறேன்.



மேதகு ஆயர் ஜெபமாலை தூசை மாணிக்கம்
சிவகங்கை

பொத்தக்காலன்விளை திருக்கல்யாண அன்னையின் ஆலயம் திருத்தலமாக அறிவிக்கப்பட்ட இந்த நல்ல நாளில் பங்குத் தந்தை, பங்கு மக்கள், அன்னையின் அகில உலக பக்தர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த திருத்தல அறிவிப்பு பெருவிழா நல் வாழ்த்துக்கள். அன்னையின் ஆசியோடு இன்னும் வாழ்வில் நிறைவான வளங்களைப் பெற்றிட வாழ்த்துகிறேன்.



மேதகு ஆயர் அந்தோனி பாப்புசாமி
திண்டுக்கல்

பொத்தக்காலன்விளை திருக்கல்யாண அன்னை ஆலயம் மறைமாவட்ட ஆயர் அவர்களால் திருத்தலமாக அறிவிக்கப்பட்டதை அறிந்து மகிழ்ச்சி கொள்கிறேன். பங்கில் உள்ள பக்த சபைகளும் அன்பியங்களும் தன்னார்வத் தொண்டர்களும் பங்கின் வளர்ச்சிக்காகவும், அன்னையின் புகழை உலக மக்கள் அனைவரும் அறியச் செய்யவும் மென்மேலும் சிறப்பாக பணியாற்ற வாழ்த்துகிறேன்.



மேதகு ஆயர் விக்டர் ஹென்றி தாகூர்
பெட்டியா, பீஹார்

தூத்துக்குடி மறைமாவட்டம் பொத்தக்காலன்விளை திருக்கல்யாண அன்னை ஆலயம் மறைமாவட்ட ஆயர் அவர்களால் திருத்தலமாக அறிவிக்கப்பட்டதை அறிந்து மகிழ்ச்சி கொள்கிறேன். பங்குத் தந்தை, பங்கு மக்கள் அனைவருக்கும் பீகார் மாநிலம் பெற்றியா மறைமாவட்ட இறைமக்கள் அனைவரின் சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த திருத்தல மண்ணிலிருந்து எங்கள் மறைமாவட்டத்தில் ஒரு அருட்பணியாளர் இறைபணியாற்றிட இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டதை எண்ணி பேருவகை கொள்கிறேன். அன்னையின் பக்தர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த திருத்தல அறிவிப்பு நல்வாழ்த்துக்களை இறையாசியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பொத்தக்காலன்விளை திருக்கல்யாணமாதா ஆலயம் திருத்தலமாக அறிவிக்கப்பட்டதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். பங்கு மக்களுக்கு இறையாசீர் அளவில்லாமல் கிடைக்க ஆண்டவரை இறைஞ்சுகிறோம்.**

**வாழ்த்துக்கள்!**

**Msgr.** மரியதாஸ் Ex. V.G. தூத்துக்குடி

**Msgr.** ஆண்ட்ரூ டிரோஸ் V.G. தூத்துக்குடி

**Msgr.** ஜோசப் செல்வராஜ் V.G. மதுரை உயர் மறைமாவட்டம்

**Msgr.** மரியதாசன் V.G. கோட்டாறு

**Msgr.** தாமஸ் பால்சாமி V.G.திருச்சி

**Msgr.** அந்தோணி சாமி V.G.பாளையங்கோட்டை

**Msgr.** ஜோசப் லூர்து ராஜா V.G. சிவகங்கை

**Msgr.** ஆரோக்கியசாமி V.G. திண்டுக்கல்

Rev.Fr. அமல்ராஜ் Chancellor, தூத்துக்குடி

Rev.Fr. எட்வர்ட் V.F. சாத்தான்குளம்

Rev.Fr. நெல்சன் பால்ராஜ் V.F. வடக்கன்குளம்

Rev.Fr. X.D. செல்வராஜ் V.F.மணப்பாடு

Rev.Fr. அல்போன்ஸ் V.F. தூத்துக்குடி

Rev.Fr. ஜெரால்டு குரூஸ் V.F.குறுக்குச்சாலை

# திருக்கல்யாண மாதா கொலு கொண்டிருக்கும் பொத்தக்காலன்விளை



## திருத்தல வரலாறு(1935–2013)

பொத்தக்காலன்விளை, திருக்கல்யாண மாதா திருத்தலம், அனைத்து மக்களையும் ஈர்க்கும் ஓர் ஒளிரும் தலமாக தூத்துக்குடி மறைமாவட்டம், சாத்தான்குளம் மறைவட்டத்தில் அமைந்துள்ளது.

**ஊர்பெயர்வரக்காரணம்:–**

ஊரைக் கட்டிக்காப்பவர்களுக்கு முக்கந்தர் என்ற பெயர் இருந்தது. கிராமங்களில் முக்கந்தர்களுக்குத்தான் முதல் மதிப்பு. 1450 ஆண்டளவில் முக்கந்தராக இருந்த ஒருவர் வலிமை மிக்கவராகவும், துணிச்சலானவராகவும் இருந்திருக்கிறார். இவர் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். எனவே இக்குடியிருப்புக்கு வெளியே உள்ள மக்கள் முக்கந்தரை பொத்தக்காலன் என்று அழைத்து பின்னர் இக்குடியிருப்பை பொத்தக்காலன்விளை என்று அழைத்திருக்கிறார்கள். அப்பெயரே இன்று வரை நிலைத்து பொத்தக்காலன்விளை என்று அழைக்கப்படுகிறது.

**பிரான்ஸ்நாட்டில்மாதாவுக்குசிறப்புபக்தி:–**

பல ஆண்டுகளாக அன்னை மரியா மீது ஆழ்ந்த பற்று கொண்ட பிரான்ஸ் நாட்டு மக்களால் அன்னை மரியாவின் கல்யாண நிச்சயதார்த்தம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. ஆண்டு தோறும் ஜனவரி 23ம் தேதி இவ்விழாவைக் கொண்டாடினார்கள். இவர்களது இந்த பக்தி முயற்சியை திருத்தந்தை மூன்றாம் சின்னப்பர் 1546ம் ஆண்டு அங்கீகரித்தார். அதனைத் தொடர்ந்து ஆரஸ் முறைப்படி 1556ம் ஆண்டு முதல் உலகெங்கும் ஜனவரி 23ம் தேதியை மாதாவின் கல்யாண நிச்சயதார்த்தம் என்று கொண்டாடினார்கள்.

**திருக்கல்யாணமாதாஆலயம்:–**

திருக்கல்யாண மாதாவை வழிபட ஓரிடத்தை ஒதுக்கி வைத்திருந்தனர். அஃது ஓர் ஓலை குடிசை மழைக்காலங்களில் பெருவெள்ளம் ஏற்படும் போது வீடுகளும் செப குடிசையும் பெரிதும் பாதிக்கப் படுபவையாக இருந்தன. ஆண்டு தோறும் வெள்ளத்தால் அழிவதால் மீண்டும் மீண்டும் புதுப்பிப்பது கடினமாக இருந்தது.

எனவே ஒரு கிணறு வெட்டி அதில் கிடைத்த கற்களைக் கொண்டும், கடற்கற்களைக் கொண்டும் ஒரு கட்டிடத்தை நிறுவ தீர்மானித்தனர். அவ்விதம் தான் 1623ம் ஆண்டு மூன்று பக்கங்களில் சுவர் வைத்து ஓர் அறையைக் கட்டினார்கள். யாரும் எப்போதும் உள்ளே வந்து செபிக்க வசதியாகக் கட்டப்பட்டது.

**திருக்கல்யாண மாதா பெயரால் உலகில் ஒரே ஒரு ஆலயம் :-**

மரியாவுக்கும் சூசையப்பருக்கும் ஏற்பட்ட திருமண நிச்சயதார்த்த நினைவாக 1835-ல் திருக்கல்யாணமாதா ஆலயம் ஒன்று கட்டி அன்னையின் புகழ்பாடினர். பின்னர் 1971ல் தற்போதுள்ள புதிய திருக்கல்யாண மாதா ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 14ம் தேதி கொடியேற்றி அன்னைமரியாளின் திருவிழா அன்னையின் திருமண ஒப்பந்த நாளாகிய ஜனவரி 23ம் தேதி திருவிழாவை சிறப்புற கொண்டாடி மகிழ்கிறார்கள். தமிழ் பண்பாட்டிலே வெற்றிலை பாக்கு என்பது மங்களகரமான நிகழ்வுகளின் போது பரிமாறப்படும் ஓர் அற்புத பொருள். எனவே திருவிழா கொடியேற்றத்திற்குப்பின் அனைவருக்கும் வெற்றிலை பாக்கு வழங்கப்படும்.

**திருக்கல்யாண அன்னையின் திருவிழா அறிக்கை :-**


பொத்தக்காலன்விளையைப் பொறுத்தமட்டில் திருக்கல்யாண மாதா திருவிழா அறிக்கை வாசிப்பது சற்று வித்தியாசமானது. இது திருமண அறிக்கை வாசிப்பது போன்று வாசிக்கப் படும்.மூவொரு இறைவன் திருவருளால் நமது ஊர்ப் பொத்தக் காலன்விளையில் குடிகொண்டிருக்கும் தாவீதின் குலத் தவரான தந்தை யாக்கோபு தாய் லிதியாள் இவர்களின் திருநிறைச்செல்வன் சூசை யப்பருக்கும் மேற்படி இடத்திலே குடி கொண்டிருக்கும் தாவீது இராஜ குலத்தில் உதித்த தந்தை சுவக்கீன், தாய் அன்னம்மாள் இவர்களின் அருந்தவப் புதல்வியான மரியாளுக்கும் ஜனவரி 23ம் தேதி திருமணம் நிச்சயிக்கப்பட்டதன் நினைவாக நிகழும் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் நாள் மாலை 6மணிக்கு புனித மிக்கேல் அதிதூதரின் திருவுருவ சப்பரப்பவனியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் பக்த கோடிகள் சூழ்ந்து நிற்க மேள வாத்தியங்கள் முழங்க வாண வேடிக்கைகள் அதிர பாடகர்கள் பண்ணிசைக்க ஆலய மணிகள் ஒலிக்க கொடியேற்றம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து “ஒன்பது நாட்கள் நவநாள்வழிபாடு களும் திருக்கல்யாண மாதா நிச்சயதார்த்ததினமாகிய 23-ம் தேதி ஆடம்பரத் திருப்பலியும் நடைபெறும் என்று பறை சாற்றப்படுகிறது” என்று வாசிக்கப்படும்.

**மக்களின் தொழில் :-**

பனைத்தொழிலே மக்களின் முதன்மையான தொழிலாக இருந்து வந்துள்ளமையால் பனைத்தொழிலை மேற்கொள்வதற்கு முன்னராக ஆலயம் தொழுது தங்களுக்குள் உறவை வளர்க்கவும், பனை ஏறுவதற்காக காடுகளுக்குள் செல்வதால் எந்தவித பொல்லாப்புகளும், விலங்குகளால், விபத்துகளும் ஏற்படாமல், மீண்டும் நலமாக மக்கள் நடுவே வந்தடைய இறையருள் வேண்டி திருவிழாவைக் கொண்டாடினார்கள்.

**புளியம்பட்டி அந்தோணியார் கோவில் :-**


குடும்பச்சூழலில் தொம்மை அந்தோணி நாடாருக்கு ஊரைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது. கடவுளின் வழிநடத்துதலிலே நம்பிக்கை கொண்ட அவர் இறுதியிலே புளியம்பட்டி வந்து சேர்ந்தார். அங்கு



சிலருடைய அரவணைப்பு கிடைத்தது. இதற்கு நன்றியாகவும், புதிதாகக் குடியேறியுள்ள இடத்தில் தன்னையும் தன்னை அரவணைக்கிற அனைவரையும் எந்தவித தீங்குகளும் நேரிடாமல் அரவணைத்து இறைவன் காத்தருள வேண்டுமென்று குடிசை ஆலயம் ஒன்றை நிறுவினார் அதுவே இன்றைய அந்தோணியார் திருத்தலம் உருவாகுவதற்கு அடிக்கல் என்று வரலாறு கூறுகிறது. இந்நிகழ்வு 17ம் நூற்றாண்டில் நடைபெற்றுள்ளது.

<u>திருக்கல்யாண மாதா</u> :-

அருட்தந்தை மஸ்கிரனாஸ் பொத்தக்காலன்விளையில் பங்குத் தந்தையாக 1949ல் பொறுப்பேற்றதும் தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு திபூர்சியஸ் ரோச் அவர்களிடம் திருக்கல்யாண மாதா கோயில் பற்றி கூறி ஆயரின் அனுமதியுடன் “ பொத்தக்காலன்விளையில் அமைந்துள்ள நமது ஆலயம் திருக்கல்யாண மாதா ஆலயம்” என்று மக்களுக்கு அறிவித்தார். தந்தை நவமணி அடிகளார் காலத்தில் இன்னும் திருக்கல்யாணத்தாயின் புகழ் ஓங்கச்செய்தார். எனவே தான் பல இடங்களிலிருந்தும் திருமண வரம் வேண்டியும், குழந்தைபாக்கியம் வேண்டியும் மக்கள் கல்யாண அன்னையின் வளாகத்தில் குவிந்து கொண்டிருக்கின்றனர்.




<u>சப்பரங்களும் சப்பரப்பறையும்</u> :-

பண்டைய காலத்தில் இருந்தே சப்பரங்கள் எடுப்பது வழக்கமாக இருந்தது. திருக்கல்யாண மாதா ஆலயத்திலும் சப்பரங்கள், சிலுவைத் தட்டோடு புனித மிக்கேல் சம்மனசுக்கு, புனித ஞானப்பிரகாசியருக்கு, புனித இஞ்ஞாசியாருக்கு, புனித ஆரோக்கிய நாதருக்கு, புனித செபஸ்தியாருக்கு, புனித அந்தோணியாருக்கு, புனித சவேரியாருக்கு, புனித தோமையாருக்கு, புனித சூசையப்பருக்கு, மாதாவுக்கு என்று இருந்தன.

மாதாவுக்கு புதிய ஆலயம் கட்டப்பட்டதும் பழைய ஆலயத்தினுள் தேரை பாதுகாப்பாக வைக்க முயன்றனர் ஆனால் தேரின் உயரம் 50 அடியாக இருந்ததால் 40 அடியாக குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே தேரில் உள்ள இரண்டு தட்டுகளை அகற்றிவிட்டு உயரத்தை குறைவாக்கி ஆலயத்திலேயே பாதுகாப்பாக தேர் சப்பரத்தை வைத்துக் கொண்டார்கள். காலப்போக்கில் அவற்றில் பல குறைக்கப்பட்டன.

தேர் சப்பரம் பழுதடைந்த நிலையில் இருந்தமையால் 1984ம் ஆண்டில் தந்தை லூர்துமணியின் முயற்சியால் மாதாவிற்கு 40 அடி உயரமுள்ள அலங்காரத் தேர் உருவாக்கப்பட்டது. 2008ல் அழகியதோர் சப்பரப்பறையைக் கட்டுவித்தனர்.

<u>செபஸ்தியார் நாடகம்</u>:-



திருக்கல்யாண மாதா திருவிழா நிறைவு பெற்ற மறுநாள் ஜனவரி 24ம் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்கு தொடர்ந்து புனித செபஸ்தியார் நாடகம் கர்நாடக இசை வடிவத்தில் நடைபெறும். நாடகம் நிறைவு பெற்ற பிறகு நள்ளிரவில் பங்கு மக்கள் அனைவரும் ‘‘மங்களமேஜெய மங்களமேளங்கள் மாசில்லா இயேசுவுக்கு மங்களமே’’ என்ற பாடல் பாட பங்குத்தந்தையை அழைத்துச் சென்று கொடியிறக்க நிகழ்ச்சி நடைபெறும்.

தொகுப்பு
**திருத்தல அறிவிப்பு மலர் குழு**


# திருத்தலம் உருவாக்கிய சிற்பிகள்

பொத்தக்காலன்விளை தூத்துக்குடி மறைமாவட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு தனிப்பங்காக 1935 முதல் இயங்கி வருகிறது. இங்கு பணியாற்றிய பங்குத் தந்தையர்களின் அயராத உழைப்பாலும் திருக்கல்யாணத்தாயின் வழிநடத்துதலாலும் பொத்தக்காலன்விளை ஒளிர்கிறது.....




அருட்திரு.
**பங்காரு அடிகளார்**

பொத்தக்காலன்விளையின் முதல் பங்குத்தந்தை இவரே. தந்தை அவர்கள் 1935 முதல் 1949 வரை பணியாற்றினார்கள்.




அருட்திரு.
**மஸ்கரனாஸ் அடிகளார்**

தந்தை அவர்கள் 1949 முதல் 1953 வரை பணியாற்றினார்கள்.




அருட்திரு.
**சிலுவை அந்தோணி அடிகளார்**

தந்தை அவர்கள் 1953 முதல் 1965 வரை பணியாற்றினார்கள்.



அருட்திரு.
**லூர்துமணி அடிகளார்**

தந்தை அவர்கள் 1965 முதல் 1970 வரை பணியாற்றினார்கள்.



அருட்திரு. **அல்போன்ஸ் மரியகாகு அடிகளார்**

தந்தை அவர்கள் 1970 முதல் 1972 வரை பணியாற்றினார்கள்



அருட்திரு.
**ராஜரீகம் அடிகளார்**

தந்தை அவர்கள் 1972 முதல் 1976 வரை பணியாற்றினார்கள்.




அருட்திரு.
**இரத்தினராஜ் அடிகளார்**

தந்தை அவர்கள் 1976 முதல் 1978 வரை பணியாற்றினார்கள்.




அருட்திரு.
**பிரான்சிஸ் அடிகளார்**

தந்தை அவர்கள் 1978 முதல் 1979 வரை பணியாற்றினார்கள்




அருட்திரு. **அலாய்ஸிஸ் நவமணி அடிகளார்**

தந்தை அவர்கள் 1979 முதல்1982 வரை பணியாற்றினார்கள்.




அருட்திரு.
**லூர்துமணி அடிகளார்**
தந்தை அவர்கள் இரண்டாவது முறையாக 1982 முதல் 1985 வரை பணியாற்றினார்கள்.



அருட்திரு.
**பீற்றர் ராஜா அடிகளார்**

தந்தை அவர்கள் 1985 முதல் 1991 வரை பணியாற்றினார்கள்.



அருட்திரு.
**ரெக்ஸ் அடிகளார்**
**(வெள்ளிவிழா நாயகர்)**
தந்தை அவர்கள் 1991 முதல் 1994 வரை பணியாற்றினார்கள்.



அருட்திரு. **சேவியர் அருள்ராஜ் அடிகளார் (வெள்ளிவிழா நாயகர்)**
தந்தை அவர்கள் 1994 முதல்1999 வரை பணியாற்றினார்கள்.



அருட்திரு. **அருள் தனசீலன் அடிகளார்**

தந்தை அவர்கள் 2004 முதல் 2009 வரை பணியாற்றினார்கள்.



அருட்திரு. **இருதயராஜா அடிகளார்**

தந்தை அவர்கள் 1999 முதல் 2004 வரை பணியாற்றினார்கள்.



அருட்திரு. **பபியான் ஜோசப் அடிகளார்**

தந்தை அவர்கள் மே மாதம் 2009ல் இருந்து பங்குப் பொறுப்பை ஏற்று பங்குப்பணி ஆற்றி வருகிறார்கள்.

# புனிதர்களும் பாதுகாவலர்களும்

| | | |
|---|---|---|
| புனித ஜெரோம் | - | நூலகர்களின் பாதுகாவலர் |
| புனித அந்தோணியார் | - | நோய்நொடி சாத்தானின் தொல்லையில் விடுதலை, குழந்தை வரம், தொலைந்த பொருள் கண்டடைதல் |
| புனித வாலன்டைன் | - | காதலர்கள் |
| புனித நிக்கோலாஸ் | - | மாலுமிகள், மணப்பெண்கள் |
| புனித மோனிக்கா | - | திருமணமான பெண்கள் |
| புனித ஆல்பர்ட் | - | மருத்துவ நிபுணர்கள் |
| புனித பிரான்சிஸ் சவேரியார் | - | சேவை ஸ்தாபனங்கள், வேத போதகர்கள் |
| புனித கிறிஸ்டோபர் | - | இயந்திரம் இயக்குபவர்கள், பயணிகள் |
| புனித செசிலியம்மாள் | - | இசைக்கலைஞர்கள் |
| புனித தாமஸ் மூர் | - | வழக்கறிஞர்கள் |
| புனித ஜாண் போஸ்கோ | - | இளைஞர்கள் |
| புனித ஆகத்தம்மாள் | - | செவிலியர்கள் |
| புனித பிரான்சிஸ் சலேசியார் | - | பத்திரிகையாளர்கள் |
| புனித லூக்கா | - | வண்ணம் தீட்டுவோர் |
| புனித வியான்னி அருளப்பர் | - | பங்குத்தந்தையர்கள் |
| புனித ஜேம்ஸ் | - | யாத்திரிகர்கள் |
| புனித தாவீது | - | கவிஞர்கள் |
| புனித மிக்கேல் அதிதூதர் | - | காவல் துறை & ராணுவம், மளிகை கடை |
| புனித கபிரியேல் | - | அஞ்சல் துறை & ஒலி, ஒளியாற்றல் |
| புனித அகஸ்டின் | - | அச்சடிப்பாளர்கள் |
| புனித தீஸ்மாஸ் | - | கைதிகள் |
| புனித இஞ்ஞாசியார் | - | தியானம் செய்வோர் |
| புனித பிரிஜ்ஜித் | - | கல்வியாளர்கள் |
| புனித ஜாண் பெர்க்மான்ஸ் | - | பீடச்சிறுவர் சிறுமிகள் |
| புனித கிலாது | - | சிற்பிகள் |
| புனித ஜெரோம் எமிலியார் | - | ஆதரவற்றவர்கள் |
| புனித ரஃபேல் | - | பார்வையற்றோர் |
| புனித ஜுலியன் | - | படகோட்டிகள் |
| புனித இசிதோர் | - | உழைப்பாளிகள் |
| புனித மென்ந்தோன் பெர்நார்டு | - | மலை ஏறுபவர்கள் |
| புனித மீரா நிக்கோலாஸ் | - | அடகு கடை காரர்கள் |
| புனித பார்பராள் | - | இடி, மின்னல் & கட்டிடக்கலை |
| புனித திருக்கல்யாணமாதா | - | திருமணவரம், குழந்தைவரம் |







**- பங்குத்தந்தை.**

# உலகத் திருச்சபை

## செய்திகள்



**புதிய திருத்தந்தையின் கேடய அடையாளமும், விருதுவாக்கும்**

புதிய திருத்தந்தை பிரான்ஸிஸ் இயேசு சபையினர் பயன்படுத்தும் அதிகாரப்பூர்வமான அடையாளத்தையும், 'எளியவராயினும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்' என்ற விருதுவாக்கையும் தன் கேடய அடையாளமாக பயன்படுத்துகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அர்ஜெண்டினாவின் பியூனர்ஸ் அயர்ஸ் பேராயராக பணியாற்றுகையில் பயனபடுத்திய அடையாளத்தையும், வார்த்தைகளையும் திருத்தந்தை பிரான்ஸிஸ் தொடர்ந்து பயன்படுத்துகிறார். IHS என்ற மூன்று எழுத்துக்களும் , அவற்றை சுற்றி அமைந்துள்ள கதிர் போன்ற அடையாளங்களும் இயேசு சபையினரின் அதிகாரப்பூர்வமான அடையாளம். அதற்கு கீழ் ஒரு விண்மீனும், ஒரு மலரும் பொறிக்கப்பட்டுள்ளன. அவை அன்னை மரியாவையும், சூசையப்பரையும் குறிப்பவை .வரிதண்டும் பணியில் இருந்த புனித மத்தேயுவை அன்புடன் பார்த்து அவரைத் தன் பின்னே வரும்படி இயேசு அழைத்த நிகழ்வை பின்னனியாகக் கொண்டு, 'எளியவராயினும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்' என்ற வார்த்தைகளை தன் பேராயர் பணிக்கு திருத்தந்தை தேர்ந்தெடுத்திருந்தார். 1953 இல் புனித மத்தேயு திருநாள் அன்று தனது 17 வது வயதில் துறவற அழைப்பை உணர்ந்தார். அந்த நிகழ்வின் நினைவாகவே தனது பணிக்கான விருதுவாக்கை மேற்கொண்டார்.

**புதிய திருத்தந்தை, முன்னாள் திருத்தந்தையுடன் சந்திப்பு**

மார்ச் 23 ஆம் தேதி புதிய திருத்தந்தை ஓய்வெடுத்து வரும் காஸ்தல் கெண்டஸ் போவிற்குச் சென்று பதினாறாம் பெனடிக்டை நட்பு ரீதியாகச் சந்தித்தார். முன்னாள் திருத்தந்தையைச் சந்தித்த திருத்தந்தை பிரான்ஸிஸ் ஆரத்தமுவி அன்பை வெளிப்படுத்தினார். இருவரும் ஆலயத்தினுள் சென்று செபித்தனர். ஆலயத்தில் திருத்தந்தைக்காண முதல் இருக்கையில் புதிய திருத்தந்தை செபிக்க பயன்படுத்தும்படி முன்னாள் திருத்தந்தை கேட்ட போது புதிய திருத்தந்தை மறுப்பு கூறி நாம் இருவரும் சகோதரர்கள் என்று கூறி ஒரே நீலரில் இருந்து செபித்தனர். 45 நிமிடங்கள் நடைபெற்ற இச்சந்திப்பில் என்ன பேசினார்கள் என்பது வெளியிடப்படவில்லை. இவர்களின் சந்திப்பு எளிய நட்பு ரீதியானதும், நல்லெண்ண முயற்சியாகவும் அமைந்தது.



அபூர்வமான காட்சி : 1
முன்னாள் – இந்நாள் திருத்தந்தையர்கள் சந்திப்பு : திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், திருத்தந்தை பிரான்சிஸ்



அபூர்வமான காட்சி : 2
மூன்று திருத்தந்தையர்கள் மொத்தமாக; திருத்தந்தை இரண்டாம் ஜாண்பால், திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், திருத்தந்தை பிரான்சிஸ்

# மறைமாவட்ட செய்திகள்



☯ **2,3.04.13** ஆகிய இரு நாட்களும் மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் தூத்துக்குடி நற்செய்தி நடுவத்தில் வைத்து குருக்களுக்கான ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

☯ **06.04.13** அன்று காலை தூத்துக்குடி புனித தாமஸ் பள்ளி நிகழ்ச்சியில் மேதகு ஆயர் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

☯ **07.04.13** அன்று காலை மங்களகிரியில் உள்ள டிவைன் மெர்சி தியான இல்லத்தில் திருப்பலியும், அன்று மாலை மணப்பாடு புனித சவேரியார் குகை அருகில் கட்டப்பட்டுள்ள ஆலய அர்ச்சிப்பும் திருப்பலியும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

☯ **10.04.13** காலை சிறுமலர் குருமட ஜூபிலி விழா மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் அங்கு பயின்ற குருக்களோடு நடைபெற்றது.

☯ **11.04.13** அன்று காலை குருக்கள் செனட் கூட்டமும், அன்று மாலை மறைமாவட்ட மெட்ரிக்குலேசன் பள்ளி நிர்வாகிகள் குழுக்கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

☯ **12.04.13** அன்று காலை திருத்தொண்டர்கள் சந்திப்பும் மாலை புனித தாமஸ் கல்வியியல் கல்லூரி ஆண்டு விழாவும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

☯ **13.04.13** அன்று மாலை நமது ஊர் அருட்தந்தை ஜான் போஸ்கோ அடிகளார் அவர்கள் தந்தையும், நமது ஆலயத்தின் முன்னாள் உபதேசியருமான திரு.இருதயம் அவர்களுடைய இறுதிச்சடங்கு திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதன்பின் சிறுமலர் குருமட ஜூபிலி விழா மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் அங்கு பயிலும் குரு மாணவர்களோடு நடைபெற்றது.

☯ **14.04.13** அன்று மாலை வள்ளியூரில் வைத்து சிறுமலர் குருமட ஜூபிலி விழா மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் அதன் உபகாரிகளோடு நடைபெற்றது.

☯ **17.04.13** அன்று மாலை அடைக்கலாபுரம் புனித வளனார் நிறுவன நிர்வாக கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

☯ **18.04.13** அன்று காலை மறைமாவட்ட கல்விக்குழு கூட்டமும், மாலை மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலாளர்கள் கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

☯ **19.04.13** அன்று மாலை மறைமாவட்ட நிதிக்குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

☯ **21.04.13** அன்று மாலை தூத்துக்குடியில் வைத்து சிறுமலர் குருமட ஜூபிலி விழா மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

☯ **22.04.13** அன்று மாலை பொத்தக்காலன்விளை புனித திருக்கல்யாண மாதா திருத்தலத்தில் வைத்து திருத்தொண்டர் பாக்கியராஜ் அவர்கள் நமது மறைமாவட்ட ஆயர் மற்றும் பீகார் மாநிலம் பெற்றியா மறைமாவட்ட ஆயர் அவர்களால் குருவாக திருநிலைபடுத்தப்பட்டார்.

☯ **27.04.13** அன்று மாலை கல்லாமொழி குருவானவர் இல்லத் திறப்பு விழாவும், திருப்பலியும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

☯ **28.04.13** அன்று காலை குருஸ்புரம் பங்கில் உறுதிப்பூசுதல் திருப்பலியும், அதன்பின் மறைமாவட்ட பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு விழாவும் மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.



# பாங்குச் செய்திகள்

☯ **ஈஸ்டர் பெருவிழா நமது பங்கில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நம்பிக்கை** ஆண்டை சிறப்பாக கொண்டாடும் விதமாக பங்குத் தந்தையால் "Credit Card System" என்ற புதிய பரிசுமழைத் திட்டம் பங்கு மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. பங்கு அளவில் நற்செயல்கள் செய்பவர்களுக்கு "Credit Card" வழங்கப்பட்டது. பொதுவான பொதுக் காரியங்களைச் செய்பவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் நற்செயல்கள் செய்பவர்களுக்கும் ஒவ்வொரு முறை நற்செயல்கள் செய்து முடித்தவுடன் பங்குத் தந்தையிடம் கூறி அவர்கள் செய்த நற்செயல்களுக்கு ஏற்ப "Credit Card" பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் பெற்ற "Credit Card"களுக்கு ஏற்ப ஈஸ்டர் அன்று மாலை நடைபெற்ற ஞாயிறு மறைக்கல்வி ஆண்டுவிழாவில் வைத்து பங்குத் தந்தையால் மிகச் சிறந்த பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த விசுவாக ஆண்டில் நற்செயல்கள் செய்து அன்னைக்கு உகந்த மக்களாக வாழ பங்குத் தந்தையால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த "Credit Card System" பங்கு மக்களிடையே மிகுந்த வரவேற்பையும் நற்செயல்கள் செய்யும் உற்சாகத்தையும் கொடுத்தது.

☯ 2,3.04.2013 மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்திர சிறப்புக்கூட்டம் தூத்துக்குடியில் வைத்து நடைபெற்றது. அதில் நமது பங்குத் தந்தை கலந்து கொண்டார்கள்.

☯ 05,06,07.04.2013 ஆகிய மூன்று நாட்களும் ஈஸ்டர் வீடு மந்திரிப்பு நடைபெற்றது. சகோ.ராஜன், சகோ.ஜாண்சன், சகோ.பிரான்சிஸ், சகோ. வினிஸ்டன், சகோ. சூசைமணி, ஆகிய அருட்சகோதரர்கள் நம் பங்கில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சென்று மக்களைச் சந்தித்து வீடு மந்திரிப்பு சடங்கை நிறைவேற்றினார்கள்.

☯ 07.04.13 அன்று மாலை புனித அந்தோணியார் அன்பியம், குழந்தைஇயேசு அன்பியம், புனித உபகாரமாதா அன்பியம், புனித திருக்கல்யாணமாதா அன்பியம், புனித லூர்துமாதா அன்பியம், புனித செபஸ்தியார் அன்பியம், ஆகிய 6 அன்பியங்களைச் சார்ந்த மக்களுக்கு பங்குத் தந்தை தலைமையில் ஆலய மண்டபத்தில் வைத்து சிறப்பு அன்பியக்கூட்டம் நடைபெற்றது.

☯ 14.04.13 அன்று காலை ஆலய மண்டபத்தில் வைத்து பங்குத் தந்தை தலைமையில் நமது ஆலயம் திருத்தலமாக அறிவிக்கப்பட இருப்பது சம்பந்தமாக சிறப்பு ஊர்ப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்று மாலை புனித பிரகாசியம்மாள் அன்பியம், புனித சூசையப்பர் அன்பியம், புனித அன்னை தெரசாள் அன்பியம், புனித பவுலடியார் அன்பியம், புனித திருக்குடும்ப அன்பியம், திருஇருதய அன்பியம் ஆகிய 6 அன்பியங்களைச் சேர்ந்த மக்களுக்கும் மேலும் கடந்த வாரம் நடைபெற்ற 6 அன்பியங்களைச் சார்ந்த மக்களுக்கும் சேர்த்து அனைத்து அன்பியங்களுக்குமாக பங்குத் தந்தை தலைமையில் ஆலய மண்டபத்தில் வைத்து சிறப்பு அன்பியக் கூட்டம் நடைபெற்றது.

☯ 22.04.2013 அன்று மாலை நமது மண்ணின் மைந்தர் திருத்தொண்டர். ஜோசப் பாக்கியராஜ் அவர்கள் மேதகு ஆயர் விக்டர் ஹென்றி தாகூர் அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள். தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு இவோன் அம்புரோஸ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி ஆசி வழங்கினார்கள்.

# திருத்தல சிறப்பு
## ஊர் பொதுக்கூட்டம்

14.4.13 அன்று காலை சரியாக 10.30 மணிக்கு 12.05.2013 அன்று திருத்தலமாக அறிவிக்கப்பட இருப்பதை எவ்வாறு சிறப்பிப்பது என்பது தொடர்பான சிறப்பு ஊர்ப் பொதுக்கூட்டம் ஆலய மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. இந்த ஊர்க் கூட்டத்தில் 150பேருக்கு மேலாக பங்கு மக்கள் கலந்து கொண்டனர். மேலும் பணிகளை சிறப்பாக செய்ய கீழ்க்கண்ட குழுக்கள் அமைக்கப்பட்டது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பின்வருமாறு

- **வழிபாட்டுக்குழு உறுப்பினர்கள்:** 1. அருட்சகோதரிகள் 2.திரு. அந்தோனி ஜெயராஜ், 3. திரு. ஜெயராஜ் 4. திரு. பிரான்சிஸ் தேவராஜ் 5.பாடகர் குழு மற்றும் தன்னார்வத் தொண்டர்கள்

- **உணவு :**

உள்ளூர் மற்றும் வெளியூர் மக்களுக்கு 12.05.2013 அன்று மதியம் சிற்றுண்டி வழங்கவும் இரவு வழிபாட்டுக்குப்பின் விருந்து வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது

உணவுக்குழு உறுப்பினர்கள் : தலைவர்– திரு. காமராஜ் 1. சேவியர், 2. திரு. ஜேம்ஸ், 3.திரு. டோமினிக் ராஜன், 4. திரு. இருதயராஜ் 5. திரு. ஜார்ஜ் 6. திரு. ஜெயசீலன் 7. திரு. ரவிஸ்டர் 8. திரு. எட்வர்ட் லாரன்ஸ்

- **விளம்பரக்குழு, செய்தித்தாள்கள் :**

பேப்பர் விளம்பரம் செய்ய திரு. லூர்துமணி, திரு.சுரேஷ், திரு. பாபு, திரு. பிரபு மற்றும் திரு. ஜேம்ஸ் ஆகியோர் மூன்று மாவட்ட விளம்பரங்களை ஏற்பாடு செய்வார்கள் மற்றும் விளம்பரக் குழுவும் அமைக்கப்பட்டது.

- **விளம்பரக்குழு உறுப்பினர்கள் (டி.வி, ரேடியோ, போட்டோ & வீடியோ)**

1. திரு. காமராஜ் 2. திரு. டோமினிக் ராஜன் 3. திரு. ஜார்ஜ் 4. திரு. ஜேம்ஸ் 5. திரு. ஜஸ்டின் டி பிரிட்டோ

**வரி போடுதல்**

ஒரு நபருக்கு வரி ரூ.1000/– என தீர்மானிக்கப்பட்டது. வரி பிரிக்கும் குழு வடக்கே திரு. லாரன்ஸ் தலைமையிலும் தெற்கே திரு. ஜேம்ஸ் தலைமையிலும் செயல்படும்.

- **நினைவுப் பரிசு :**

இந்த சிறப்பு நிகழ்வில் கலந்து கொள்ளும் குருக்கள் மற்றும் துறவியர் அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. நினைவுப்பரிசு வகைக்கு திருக்கல்யாணத்தாய் புகழ் பரப்பும் பணிக்குழு திரு. காமராஜ் தலைமையில் முழு செலவையும் ஏற்றுக்கொள்ளும்.

- **விளக்கு அமைக்க** (நியான்)

ஆலய முகப்பில் இயேசு சுரூபத்திற்கு அருகில் திருக்கல்யாணத்தாய் திருத்தலம் என்ற நியான் விளக்கு வைக்க தீர்மானிக்கப்பட்டது. அதற்கான செலவை திரு. ஜஸ்டின் டி பிரிட்டோ அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்

- **குறுந்தகடு & ஒலி நாடா**

நமது திருத்தலம் பற்றிய குறும்படம் ஒன்று வெளியிட தீர்மானிக்கப்பட்டது. அதற்கான செலவுகள் அனைத்தையும் திரு. ஜார்ஜ் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஒலி நாடா தயாரிக்க திரு. காமராஜ் அவர்கள் பொறுப்பேற்றார்கள்.

☯ **ஒலி ஒளி அமைப்பு**

மூன்று கோபுரம், பந்தல் உட்புறம், கெபி, மரங்கள் தேரோட்ட வீதி மற்றும் பள்ளி வளாகம் ஆகியவைகளை ஒளி ஜோடனை செய்ய மற்றும் ஸ்பீக்கர், மைக் வகைக்கு திரு.அந்தோனி பாஸ்கர் அவர்களிடம் ரூபாய் 1,14,999/-க்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. டீசல் உட்பட அனைத்தும் அவர்களைச் சார்ந்தது.

மேளம், வாணம், மற்றும் பந்தலில் வெள்ளைத் துணி கட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

☯ **திருக்கல்யாணத் தாய் சிறப்பிதழ் :** மே மாத திருக்கல்யாணத் தாய் இதழ் சிறப்பிதழாக வெளிவர தீர்மானிக்கப்பட்டது. 5000 சிறப்பிதழ்கள் திரு. சந்தனதிரவியம் அவர்கள் இலவசமாக அச்சிட்டு வழங்குவார்கள். சிறப்பிதழ் தயாரிக்கும் பணியை திருக்கல்யாணத் தாய் ஆசிரியர் குழு செய்யும்.

☯ **பங்கு அலுவலக கட்டிடப் பணிகள் :** பங்கு அலுவலகம் கட்ட மிகக் குறைந்த விலையில் கொட்டேஷன் (ஒரு சதுர அடிக்கு ரூ.175) கொடுத்த திரு. அருள் செல்வனுக்கு பணியானது கொடுக்கப்பட்டது.

14.4.2013அன்று திருத்தல நிதிக்குழுவும் அமைக்கப்பட்டது. இந்த நிதிக்குழுவில் 5 ஆண்களும் இரண்டு பெண்களும் அடங்குவர். அந்த நிதிக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு: 1. அருட்திரு. பபியான் ஜோசப் (தலைவர்) 2. திரு. எட்வின் காமராஜ் (செயலாளர்) 3. திரு. ஜேம்ஸ் (பொருளாளர்) 4. திரு. சிங்கராயன் 5. திரு. ஜார்ஜ்

6. திரு. டொமினிக் ராஜன், 7. திருமதி. ரெவனியூஸ் ராணி 8. திருமதி. ரெஜினாள் மேரி

☯ **மாதா சப்பரம் :** கூண்டில் உள்ள மாதா சுரூபத்தை புதிய சிறிய சப்பரத்தில் வைத்து ஆலய மண்டபத்தில் ஜோடித்து அன்றைய திருப்பலி முழுவதும் வைக்க தீர்மானிக்கப் பட்டது. (திருப்பலிக்கு முன் பவனி)

மேற்கண்ட பணிகளோடு உள்ளூர், வெளியூர் வாழ் மக்கள் அனைவரும் இணைந்து பணி செய்து இந்த நிகழ்வை மாபெரும் வெற்றி விழாவாக கொண்டாட உங்களை அன்புடன் வேண்டுகிறேன். தொடர்ந்து இணைந்து செபிப்போம், இணைந்து பணி செய்வோம்.

**-பங்குத் தந்தை**

## திருத்தல மண்ணின் அருட்பணியாளர்கள் வாழ்த்துகிறார்கள்



அருட்திரு **ஜாண் போஸ்கோ**
(பங்கின் முதற்குரு)



அருட்திரு. **சிலுவைதங்கம்**
(பங்கின் இரண்டாம் குரு)



அருட்திரு. **டென்சில் ராஜா**
(பங்கின் மூன்றாம் குரு)



அருட்திரு. **ஜோசப் ஸ்டார்லின்**
(பங்கின் நான்காம் குரு)



அருட்திரு. ஜோசப் **பாக்கியராஜா**
(பங்கின் ஐந்தாம் குரு)

# திருத்தலத்தின் தலைப்புச் செய்திகள்

1924 -2013

அணைக்கரைக்கும், பெரியதாழைக்கும் கிளைப்பங்காக இருந்த பொத்தக்காலன் விளை 1914ல் இருந்து சொக்கன்குடியிருப்பின் 9 கிளைப்பங்குகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. அப்போது 800 கிறிஸ்தவர்களைக் கொண்டிருந்தது.

- 1924-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் தேதியில் தற்போதுள்ள திருக்கல்யாணத்தாய் ஆலயத்திற்கு மேதகு திபூர்சியூஸ்ரோச் ஆண்டகை அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
- 1926ம் வருடம் புனிதமரியன்னை துவக்கப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.
- 19-03-1930 புனித அன்னாள் கன்னியர் இல்லம் தோற்றுவிக்கப்பட்டது.
- 1932ம் வருடம் பெண்களுக்கென்று புனித வளனார் துவக்கப்பள்ளி துவக்கப்பட்டது.
- 1935ம் ஆண்டு இணையூர்களான நவமுதலூர், கொழுந்தட்டு, வாலத்தூர் ஆகியவற்றை கொண்டு பொத்தக்காலன்விளை தனிபங்காக தோற்றுவிக்கப்பட்டது. அருட்திரு. பங்காரு அடிகளார் முதல் பங்குகுருவாக பணிஏற்றார்கள்.
- 1953ம் ஆண்டு மரியன்னை துவக்கப்பள்ளி கட்டிடத்தை விரிவுபடுத்தி நடுநிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.
- 23-01-1971ம் ஆண்டில் மேதகு தாமஸ் ஆண்டகையால் தற்போதைய ஆலயம் திரு நிலைப்படுத்தப்பட்டது. ஊரின் தென்பகுதியில் புனித அந்தோணியார் கெபி கட்டப்பட்டது.
- 1984ம் ஆண்டில் மாதாவிற்கு 45 அடி உயரமுள்ள அலங்காரத்தேர் உருவாக்கப்பட்டது.
- 1986ம் ஆண்டு நடுநிலைப்பள்ளியானது உயர்நிலைப்பள்ளியானது.
- 1988ம் ஆண்டு உயர்நிலைப்பள்ளியானது மேல்நிலைப்பள்ளியாக உயர்வடைந்தது.
- 1989-1990 ஆகிய இரண்டு ஆண்டுகள் ஆசிரியர்பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது.
- 1991 முதல் 1992 வரை ஆலய கோபுரப்பணிகள் நடைபெற்றது.
- 11-07-1993ல் பங்குத்தந்தையின் புதிய இல்லம் பயன்பாட்டிற்கு வந்தது.
- 1994,1995 ஆலயமண்டபம் கட்டப்பட்டது. 1996,1997ல் ஆலய காம்பவுண்ட் கட்டப்பட்டது.
- 1997,1998ல் லூர்து அன்னை கெபி கட்டப்பட்டது. 1999ல் புதிதாக ஆலயத்திற்கு வர்ணம் பூசப்பட்டது.
- 2000 முதல் 2004 வரை மேல்நிலைப்பள்ளியின் கட்டடவேலை ஆரம்பிக்கப்பட்டு வட பகுதியின் வேலை நிறைவுபெற்றது. தென்பகுதியின் அடித்தளம் வரை வேலை நடைபெற்றது.
- 2004 ஆம் ஆண்டு ஆலயத்திற்கு மீண்டும் வர்ணம் பூசப்பட்டது.
- 2005 ஆம் ஆண்டு பங்கில் அன்பியங்கள் துவக்கப்பட்டது.
- 2006 ஆம் ஆண்டு ஆலயத்தில் உறவலைகள் ஒலிநாடா வெளியிடப்பட்டது.
- 2008 ஆம் ஆண்டு நாற்சந்தி கெபி திறக்கப்பட்டு அற்புதத்தாயே ஒலிநாடா வெளியிடப்பட்டது.
- 2009 ஆம் ஆண்டு மேல்நிலைப்பள்ளி புதிய கட்டிடம் திறக்கப்பட்டது.
- 2009 ஆம் ஆண்டு அழகியத்தாயே ஒலிநாடா வெளியிடப்பட்டது.
- 2009-ம் ஆண்டு புதிய தேர்ப்பறை திறக்கப்பட்டது. 2009-ம் ஆண்டு அசனச்சாவடி திறக்கப்பட்டது.
- 28-05-2009 அருட்திரு. பபியான் ஜோசப் அவர்கள் பங்குத்தந்தையாக பொறுப்பேற்றுக்கொண்டார்கள்.
- 2009-ம் ஆண்டு ஆலயத்திற்கு வர்ணம் பூசப்பட்டது.
- 27-09-2009 மறைமாவட்ட திருத்தல திருப்பயணமாக தாப்பாத்தி புனித அந்தோணியார் கோயிலுக்கு பங்கிலிருந்து 2 பேருந்துகளில் சென்றனர்.
- 2010-ம் ஆண்டு ஊர்த்திருவிழா பொதுக்கூட்டத்தில் பங்கின் பவளவிழா மற்றும் மறை மாவட்ட விழா ஆகிய முப்பெருவிழாக்களை சிறப்புடன் கொண்டாட தீர்மானிக்கப்பட்டது. மாதம்தோறும் வெளியிடப்பட இருக்கும் திருத்தல இதழுக்கு திருக்கல்யாணத்தாய் என

பெயர் இடப்பட்டது. 3 ஆம்திருவிழா அன்று பவளவிழா துவக்கமும்6ஆம்திருவிழா அன்று மாத இதழ் வெளியீடும் 9ஆம் திருவிழாஅன்றுபவளமலர் வெளியீடும்,10 ஆம்திருவிழா அன்றுதிருத்தல இணையதளதுவக்கமும் ஏற்பாடுசெய்யதீர்மானிக்கப்பட்டது.பல்வேறு பணிக்குழுக்கள்அமைக்கப்பட்டுமுப்பெருவிழாக்களைசீரும்சிறப்புமாககொண்டாட தீர்மானிக்கப்பட்டது.

- 16-01-2010-ம்ஆண்டுபயணிகள்தங்கும்அறைதிறக்கப்பட்டது.
- 22-01-2010ல்திருக்கல்யாணத்தாய்மாதஇதழ்வெளியிடப்பட்டது.
- 23-01-2010அன்றுதிருக்கல்யாணமாதாஇணையதளம்ஆரம்பிக்கப்பட்டது.
- 7-03-2010மறைமாவட்டதிருயாத்திரைவிழாஉவரியில்நடைபெற்றது.நமதுஊரில் இருந்து75- பேர்கலந்து கொண்டனர்.
- 20-03-2010தவக்காலதிருயாத்திரைபயணம்(14திருத்தலங்கள்)3பேருந்துகளில் சென்று வந்தனர்.
- 2009-2010ம்கல்விஆண்டில்தூத்துக்குடிமறைமாவட்டம்சாத்தான்குளம்மறைவட்ட அளவில் நடைபெற்றதொடக்கப்பள்ளிகளுக்கானமறைக்கல்வித்தேர்வில்பொத்தக் காலன்விளைபங்கில் உள்ள மூன்றுதொடக்கப்பள்ளிகளும்முதல்மூன்று இடங்களையும்பெற்றன.
- 2009-2010ம்கல்விஆண்டில்தூத்துக்குடிமறைமாவட்டம்சாத்தான்குளம்மறை வட்ட அளவில் நடைபெற்றஞாயிறுமறைக்கல்வித்தேர்வில்பொத்தக்காலன்விளைபங்கு முதல்இரண்டு இடங்களையும்பெற்றது.
- 2010ம்ஆண்டுமேல்நிலைப்பள்ளியில்புதிதாக50டெஸ்க், பெஞ்சுகள்வாங்கப்பட்டது.
- 16-09-10அன்றுஆலயவளாகத்தில்உள்ளஅசனச்சாவடியின்இரண்டாம்மாடிகட்டடப் பணிபங்குத்தந்தைஅவர்களால்ஆசீர்வதித்துஆரம்பித்துவைக்கப்பட்டது.
- 17-10-2010அன்றுபுனிதஅன்னாள்கன்னியர்இல்லம்புதுப்பித்தகட்டிடம்அர்ச்சித்து திறக்கப்பட்டது. இறைமக்களுக்குஇனிப்புகள்வழங்கப்பட்டது.
- 14-11-2010அன்று பங்குத்தந்தைதலைமையில்பவளவிழாநிறைவுதிருவிழாசிறப்பு ஊர்பொதுக் கூட்டம் நடைபெற்றது.
- 2011ம்ஆண்டு லூர்து மாதா கெபி புதுப்பித்து அழகு படுத்தப்பட்டது.
- 2011ம்ஆண்டு பள்ளி வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்ட்டது.
- 2011ம் ஆண்டு பவளநிறைவு விழாவை முன்னிட்டு ஒலிநாடா வெளியிடப்பட்டது.
- 24-01-2011ம் ஆண்டு பயணிகள் இல்ல மேற்புறம் ஹால் திறக்கப்பட்டது.
- 30.09.2011 மேல்நிலைப்பள்ளியில் பள்ளிச்சுற்றுசுவர், சைக்கிள்நிறுத்துமிடம், தேவையானகழிப்பிடவசதிகள் செய்யப்பட்டன.
- 26.12.2011 புனித திருக்கல்யாண மாதா திருத்தலத்தில் வைத்து ஜோசப் ஸ்டார்லின் அவர்கள் மேதகுஆயர் அவர்களால் குருவாக திருநிலைபடுத்தப்பட்டார்கள்.
- 2011-12 கல்வியாண்டில்மறைமாவட்டபள்ளிகளின் சிறந்த தாளாளருக்கான பரிசு நமது பங்குத்தந்தைக்கு மேதகுஆயர் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் நமது மேல்நிலைப்பள்ளி சிறந்தபள்ளியாக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 04.10.12 அன்று நமது பள்ளியில் வைத்து தூத்துக்குடி மறைமாவட்ட வெள்ளிவிழா கொண்டாட்டங்கள் நடைபெற்றன.
- 11.12.12 நம்பிக்கைஆண்டின் 10அம்ச திட்டம் பங்குத்தந்தையால் அறிவிக்கப்பட்டது.
- 22,23.01.2013ஆகிய இருநாட்களும் அன்னையின் அதிசய 100வது தேர்ப்பவனி நடைபெற்றது.
- 01.02.2013அன்று நம்பிக்கைஆண்டை முன்னிட்டு பங்குத்தந்தையால் கிரெடிட் கார்டு சிஸ்டம் அறிவிக்கப்பட்டு சிறப்பாகநற்செயல்கள் செய்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.
- 22.04.2013அன்று மண்ணின்மைந்தர் ஜோசப் பாக்கியராஜ் அவர்கள் மேதகுஆயர் அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார்.
- 12.05.2013அன்று திருக்கல்யாணமாதா ஆலயம் திருத்தலமாக மேதகு ஆயர் இவோன்அம்புரோஸ் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது.

**-திருக்கல்யாணத்தாய்மலர்குழு**

# திருக்கல்யாணத்தாய் திருத்தலம்

## பொத்தக்காலன்விளை


## வரலாற்று சுவடுகள்

| | |
|---|---|
| புதிய ஆலய அடிக்கல் நாள் | : 23.01.1924 |
| அடிக்கல் நாட்டியவர் | : மேதகு. திபூர்சியூஸ் ரோச் ஆண்டகை |
| தனி பங்கு | : 1935-ம் ஆண்டு |
| ஆலய திருநிலை நாள் | : 23.01.1971 |
| திருநிலைப்படுத்தியவர் | : மேதகு. தாமஸ் ஆண்டகை |
| அன்னை ரதத்தில் கோபுரம் மீது இறங்கிய காட்சி | : 09.12.2000 |
| பவள விழா நிறைவு நாள் | : 23.01.2011 |
| திருத்தலமாக அறிவிக்கப்பட்ட நாள் | : 12.05.2013 |
| திருத்தலமாக அறிவித்தவர் | : மேதகு. Dr. இவோன் அம்புரோஸ் ஆண்டகை |

**திருத்தலமாக உருவாக பெரும் தொண்டாற்றிய முன்னாள் பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள், மண்ணின் அருட்பணியாளர்கள் மற்றும் பங்கு மக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்!**

**12.05.2013**
**பொத்தக்காலன்விளை**

**திருத்தல அதிபர்**
**மற்றும்**
**பங்கு மக்கள்**



# கவிதைச் சோலை

## திருக்ககல்யாணத்தாய்

அன்னையின் அருளை நாளும் போற்றி
ஆஹா...ஆஹா...என்று சொல்வோம்
இன்பத்தை தரும் தாய்
ஈன்ற பொழுதில் நம்மோடு இருக்கும் தாய்
உண்மையே என்றும் சொல்வோமே
ஊழியத்துக்கு நாளும் செல்வோமே
எக்காலத்திலும் தாய் என்று சொல்லி
ஏகமாய் துதிப்போம்
ஐயருள் கொண்டத்தாய்
ஒரு கோடிக்கும் மேலான அதிசயத்தை செய்யும் தாய்
ஓடிடுமே என்றும் சாத்தான்
ஔவருளை நமக்கு தருவாள்
ஃதகைய தாயே நம் திருக்கல்யாணத்தாய்

– **அ.அருள் தெரஸ் சாலினி,** மாமண்டூர்.

## மரியே போற்றி

அனைவரும் உறங்கினாலும்
அலைகள் உறங்கா
திசைகள் மாறினாலும்
திருக்கல்யாண மாதா துணையிருப்பாள்!
வணக்க மாதமாம் மேமாதம்
வாழ்வோம் மரி பாதம் பற்றியே
எல்லோருக்கும் தாயாயிருந்து
எல்லையில்லா ஆசியளித்தவரே!
உம் குழந்தைகள் வாழ்த்த
உலகமே உமை போற்றுதம்மா!

– திருமதி.**ஜெயந்தி சலேஜ்**
திசையன்விளை.



## அன்னை வாழ்க

அன்னை வாழும் ஆலயமே
அழகிய பொற்பை நகரினிலே
என்றும் எங்கும் மகிழ்வுடனே
ஏற்றம் பெற்று வாழ்ந்திடவே

அன்னையின் திருத்தலம் வளர்ந்திடவே
அண்டினோர் யாவரும் செழிப்புடனே
பொற்பை நகரின் மாந்தர்களே
பொங்கும் சிறப்புடன் வாழ்ந்திடவே

சான்றோர் வியக்கும் தேர் வாழ்க
சரித்திரம் படைகக்கும் சபை வாழ்க
அறிவை புகட்டும் பள்ளி வாழ்க
அனைத்தும் கொடுக்கும் அன்னை வாழ்க!

– **சுகிர்தமணி அன்பரசன்,**
கவரப்பேட்டை.

## அன்னை மரி

அன்னை மரி அருளைத் தந்து
தேரில் வருவாளாம்
இன்பமெல்லாம் ஈந்தளித்து
என்றும் வருவாளாம்

முத்துச் சிரிப்பில் மொட்டுக்கள் மகிழ
மகிழ்ச்சி தருவாளாம்
தெவிட்டாத இன்பம் வாழ்விலே தந்து
தேனாய் இனிப்பாளாம்

– **ஜோஸ்பின் மோரிதாசன்,**
கவரப்பேட்டை.



# திருத்தல முதற்சனி வழிபாடுகள்

நம் மரியன்னை சனிக்கிழமைபிறந்ததினால் அந்நாள் மாதாவுக்கு உகந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது. அதனினும் பிரதி மாதத்தில் வரும் முதல் சனி அன்று திருப்பலியில் பங்கேற்று தேவ அன்னையிடம் வேண்டி வந்தால் நினைத்த காரியம் கட்டாயம் நிறைவேறும் என்பது திண்ணம்.

அருட்தந்தை அருள் தனசீலன் அடிகளார் திருமணவரமும், குழந்தை வரமும் வாரி வழங்கும் திருக்கல்யாணத்தாயின் புதுமைகளையும், புகழையும் பரப்ப மாலை 5-30 மணிக்கு அன்னையின் நவநாள் செபத்துடன் திருப்பலி நிறைவேற்றி வந்தார்கள். வெளியூரிலிருந்து வரும் பக்தர்கள் திருப்பலியில் பங்கேற்று அன்னையின் அருளைப் பெற்றுச் செல்ல வசதியாகவே இந்த மாற்றத்தைச் செய்தார்கள்.

வெளியூர் பக்தர்கள் திரும்பிச் செல்ல வசதியாக பகல் 12 மணிக்கு முதல் சனி திருப்பலியும், சிறப்பு நவநாளும் நடைபெற்றது. இதனால் அலை அலையாய் மக்கள் திரண்டு பொற்பையை நோக்கி வந்து கல்யாணத்தாயின் கருணையைக் கனிவுடன் பெற்றுச் செல்கின்றனர். திருக்கல்யாணத்தாயிடம் திருமண வரமும், குழந்தை வரமும் பெற திரளான மக்கள் வந்து அன்னையின் அற்புத சுரூபத்தைச் சுற்றி வேண்டுதலாக தொட்டில்களும், மாங்கல்ய கயிறும் கட்டி வருகின்றனர். இமயம் முதல் குமரி வரை உள்ள மக்கள் ஜாதி, மத வேறுபாடின்றி, பொற்பையை நோக்கி திருப்பயணமாக வருகின்றனர்.

அருட்தந்தை. பபியான் ஜோசப் அடிகளார் மக்களின் குறைகளை நீக்க விண்ணப்பப் பெட்டி ஏற்பாடு செய்து பீடத்தின் முன்புறத்தில் வைத்துள்ளார்கள். நண்பகலில் திருப்பலிக்கு வரும் மக்கள் பசியோடு செல்வதைப் பார்த்த அருட்தந்தை, திருப்பலிக்கு பின்னர் உள்ளூர், வெளியூர் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் செய்ய ஏற்பாடு செய்துள்ளார்கள்.

அலைகடலென அணி அணியாய் வரும் பக்தர்களின் கூட்டம் பரவசமடையச் செய்து வருகிறது. தற்போது காலை 9-30 மணியளவில் ஜெபமாலை, தொடர்ந்து அன்னையின் மன்றாட்டு மாலை, அதன்பின்னர் அன்னையின் அற்புத சுரூப சப்பரப்பவனி பாடலுடன் அழகுற நடைபெற்று வருகிறது. சிங்கார சிறு தேரில் அன்னை சிங்காரமாய் பவனி வரும் தோற்றம் கண்கொள்ளாக் காட்சியளிக்கின்றது. அருட்தந்தை பபியான் அடிகளார் திருக்கல்யாணத் தாயின் ஆலயத்தை திருத்தலமாக மாற்ற தீவிர முயற்சி எடுத்து வந்தார்கள். இறையருளால் அன்னையின் ஆலயம் திருத்தலமாக மாறிய இந்நன்னாளில் நாம் அனைவரும் இணைந்து செபிப்போம். முதல் சனி வழிபாட்டில் அனைத்து மக்களும் பங்கு பெற்று திருக்கல்யாண அன்னையின் அருளை நிறைவாகப் பெற்றுச் செல்வோம்.

**ஏப்ரல் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள்** 06.04. 2013 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**பெலிக்ஸ் HGN** அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துக்கள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு. **A.S.ராஜா** அடிகளார், அவர்கள் தலைமையில் பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு. **பங்கிராஸ்,** அருட்திரு. **கிராஸிஸ்,** அருட்திரு.**சகாயராஜ்,** அருட்திரு. **பாஸ்டியான்,** அருட்திரு. **பபிஸ்டன்,** திருத்தொண்டர் **டேவிட் வளன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**பெலிக்ஸ்** அடிகளார், மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து 150 வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **12,600** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதை அருட்சகோதரர்கள். **ராஜன், பிரான்சிஸ், சூசைமணி, ஜாண்சன்,** திருத்தொண்டர் **டேவிட் வளன்** வழி நடத்தினார்கள். அதன்பின்பு பங்குத்தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. **அதன்பின் சிறப்பு மாலை ஆராதனை நடைபெற்றது.**

**- பங்குத்தந்தை**




# நன்றிகள் பலகோடிகள் 06.04.2013 முதல்சனி உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| அந்தோணி சேசுராஜா, பொற்பை | 500.00 |
| ரென்னீஸ் பியூட்டி பார்லர் | 3000.00 |
| எமல் கிளமண்ட் | 100.00 |
| ரோஸ் சேவியர், சென்னை | 2000.00 |
| பங்குத் தந்தை மூலம் வரவு | 980.00 |
| குறிப்பிட்ட நபர், திருவம்பலபுரம் | 1000.00 |
| சந்தியாகு ராஜரத்தினம், பொற்பை | 3500.00 |
| சந்தணபாண்டி, மும்பை | 500.00 |
| குறிப்பிட்ட நபர், பொற்பை | 501.00 |
| லூக்காஸ் மளிகை, திருப்பூர் | 1001.00 |
| பால்ராஜ், பொற்பை | 200.00 |
| சந்தணலூக்காஸ் மரியராணி, பொற்பை | 1000.00 |
| அந்தோணி குரூஸ், பொற்பை | 200.00 |
| ராஜேந்திரன், பொற்பை | 110.00 |
| அந்தோணிராஜ், பொற்பை | 500.00 |
| ராணி, விஜயமங்கலம் | 100.00 |
| அந்தோணி பிலவேந்திரன். பொற்பை | 200.00 |
| அந்தோணி ஜெயராஜ், பொற்பை | 500.00 |
| ஜெபஸ்டின் ரெனிஷா, மதுரை | 500.00 |
| ஹெர்மஸ் ஷகிலா, ஸ்ரீவைகுண்டம் | 500.00 |
| மாதா டிராவல்ஸ், வெள்ளவிளை | 1000.00 |
| விசுவாசம் மிக்கேலம்மாள், கோவில்பட்டி | 100.00 |
| ஸ்டீபன், கராத்தே மாஸ்டர், குரும்பூர் | 100.00 |
| சுரேஷ், திசையன்விளை | 50.00 |
| ஜாண்சன், ராஜாக்கமங்கலதுரை | 200.00 |
| பிரின்ஸ், ஆசாரி பள்ளம் | 50.00 |
| மனுவேல், தூத்துக்குடி | 500.00 |
| ராஜ் போற்றியா, புன்னக்காயல் | 200.00 |
| ஆக்னஸ், ஆசாரிபள்ளம் | 50.00 |
| ஜார்ஜ் மேரி, தூத்துக்குடி | 1000.00 |
| அந்தோணி செல்வின், சாத்தான்குளம் | 1000.00 |
| தேவசகாயம், ராஜாவூர் | 100.00 |
| பாக்கியராஜ் விஜிலா, கன்னியாகுமரி | 200.00 |
| ரதராஜன் ரெக்ஸிலீன் விக்டோரியா, தூத்துக்குடி | 5000.00 |
| சேசுராஜேஷ், புதுக்கோட்டை | 100.00 |
| ஜாண் போஸ்கோ, ராமன்புதூர் | 1000.00 |
| மேரி கில்பர்ட், திருநெல்வேலி | 500.00 |
| சுனித், உவரி | 500.00 |
| சுபாஷ் | 930.00 |
| அந்தோணி ராஜ், விருதுநகர் | 101.00 |
| மரியநாடு ஜீவன் | 200.00 |
| மோனிக்கா ஜோஸ், கீழமணக்குடி | 300.00 |

| | |
|---|---|
| ஜெரின், நாகர்கோவில் | 300.00 |
| இளங்கோ, கள்ளிகுளம் | 100.00 |
| டேவிட், கண்டன்விளை | 500.00 |
| ஜெயா, கண்டன்விளை | 200.00 |
| ஜார்ஜ் பிலாசியாந், ராமன்புதூர் | 500.00 |
| குணசேகரன், திருச்செந்தூர் | 200.00 |
| ஜெகன், தளவாய்புரம் | 500.00 |
| ஜெயசீலி, ராதாபுரம் | 100.00 |
| குருசடி, நாகர்கோவில் | 200.00 |
| பிரேம் குமார், சாத்தான்குளம் | 1000.00 |
| டைமன்சிஸ், நுல்லிவிளை | 500.00 |
| சுரேஷ் பாண்டியன், பொற்பை | 100.00 |
| கென்சி, உவரி | 1000.00 |
| மரிய செல்வி, கொம்புத்துறை | 1000.00 |
| ஜஸ்டின் வெண்ணிலா, நீரோடி | 500.00 |
| பதுவா டிராவல்ஸ், மணவை பக்தர்கள் | 1500.00 |
| கிறிஸ்டோபர், ராஜாவூர் | 2000.00 |
| காஷ்மீர், அழகப்பபுரம் | 1000.00 |
| முருகேசன், வடக்கு நரையன்குடியிருப்பு | 1000.00 |
| திவ்யா வினோத், பொற்பை | 2000.00 |
| மொத்தம் | **44273.00** |

## முதற்சனி உணவுப்பொருட்கள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| வர்க்கீஸ் ஆலிஸ்மேரி, ஆரோக்கியபுரம் | அரிசி 25கிலோ |
| ஏசுதாசன் லூக்காஸ்மேரி, பொற்பை | வாழைத்தார் 1 |
| சூசைநாதன் குடும்பத்தார், பொற்பை | தக்காளி 50கிலோ |
| அந்தோணி தாசன், பொற்பை | முருங்கைக்காய் |
| மரிய அருள், வாடியூர் | அரிசி 25 கிலோ |
| ரவீஸ்டர், பொற்பை | ம.பூசணி 30 கிலோ,<br>கேரட் 30 கிலோ<br>ப.மிளகாய் 32 கிலோ,<br>சா.வெங்காயம். 70கிலோ<br>பெ.வெங்காயம் 3மூடை,<br>உருளை 5மூடை |
| லாரன்ஸ், பொற்பை | தக்காளி 15 பெட்டி |
| டைட்டஸ், பொற்பை | பெ.வெங்காயம் 1 மூடை |
| அலெக்ஸ், பொற்பை | பெ.வெங்காயம் 1 மூடை |
| ஜெயச்சந்திரன், கோயம்பேடு | சேனைகிழங்கு 70 கிலோ |
| துரை, கோயம்பேடு | மாங்காய் 10 கிலோ<br>இஞ்சி. 3கிலோ |
| பெயர் விரும்பாத நபர் | அரிசி 3 மூடை |
| பெயர் விரும்பாத நபர் | அரிசி 1 மூடை |
| ஜஸ்டின் | அரிசி 1 மூடை |
| ஜெரோம் குயிண்டின், கவரப்பேட்டை | அரிசி 1 மூடை |
| ராஜேஷ் அமலா, பொற்பை | அரிசி 50 கிலோ |
| சூசை மிக்கேல், கோயம்புத்தூர் | அரிசி 50 கிலோ |

| | |
|---|---|
| ரூபி ஸ்டோர், பொற்பை | அரிசி 50 கிலோ |
| ஆரோக்கிய மிக்கேல் அந்தோணி கிரிஸ்டல், ரோஸ்லெட் | |
| ஷகிலா – கீழ்மணக்குடி | அரிசி 25 கிலோ |
| முத்துக்குமார் ரோஸ்லின்,சஞ்சீவ், அமுதுண்ணாக்குடி | அரிசி 25 கிலோ |
| ராஜ் அந்தோணி, செட்டிவிளை | அரிசி 15 கிலோ |
| வசந்த், உவரி | அரிசி 25 கிலோ |
| சித்திரை ராஜா, உடன்குடி | அரிசி 25 கிலோ |
| ஆல்பின் பில்லஸ் ரிபான் குடும்பம் | அரிசி 25 கிலோ |
| குளோரி ராஜாவூர், | தேங்காய் 15 கிலோ |

## முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (06.04.2013)

| | | |
|---|---|---|
| வின்சென்ட் உணவு விடுதி | – | 1250.00 |
| கணேசன் தூய்மைப்பணி | – | 2000.00 |
| யோவான் சமையல் குழு | – | 13000.00 |
| இருதயராஜ் ரூபி ஸ்டோர் அரிசி 7.5 மூடை | – | 27000.00 |
| அலெக்ஸ் இறைச்சி 100 கிலோ | – | 42000.00 |
| ஹென்றி மளிகை | – | 50800.00 |
| ஜஸ்டின் தண்ணீர் மூடை 120 | – | 6240.00 |
| சேசு ஜெயராஜ் மற்றும் பணியாளர்கள் | – | 3100.00 |
| ஜாண் வண்டி வாடகை | – | 200.00 |
| தேவ அமிர்தராணி செங்கல் 400 | – | 2400.00 |
| இம்மான் வண்டி வாடகை + தண்ணீர் லோடு | – | 2100.00 |
| ஜெயக்குமார் வாடகை 7 நடை | – | 1750.00 |
| சென்னை காய்கறி பஸ் செலவு | – | 700.00 |
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | – | 200.00 |
| தூய யோவான் ஆலய பாத்திர வாடகை | – | 200.00 |
| மொத்தம் | | 152940.00 |

| | | |
|---|---|---|
| முன் இருப்பு வங்கியில் | – | 10466.00 |
| நன்கொடை வரவு | – | 44273.00 |
| முதல் சனி மீதி பொருள் ஏல வரவு | – | 7850.00 |
| ஜோஸ் குடும்பத்தார் வங்கியில் | – | 3000.00 |
| திருத்தலக்கடை இருப்புப்பணத்தி லிருந்து உணவுவகைக்கு கொடுத்தது | | 101000.00 |
| கையில் | | 15.00 |
| மொத்தம் | – | 166604.00 |
| செலவு | – | 152940.00 |
| மொத்த இருப்பு | – | 13664.00 |

| | | |
|---|---|---|
| வங்கியில் | – | 13466.00 |
| கையில் | – | 198.00 |
| இறுதி மொத்த இருப்பு | – | 13664.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 28.02.13 அன்று இருப்பு | 193699.00 |
| 01.03.13 முதல் 31.03.13 வரை விற்பனை | 164056.00 |
| மொத்தம் | 357755.00 |
| 01.03.13 முதல் 31.03.13 வரை செலவு (பொருட்கள் + சம்பளம்) | 45586.00 |
| 31.03.13 அன்று இருப்பு | 312169.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்

# திருத்தல தேர்ப்பவனியின் மகிமை.

திருக்கல்யாணத்தாய் திருவிழா கொடியேற்றத்திற்கு முந்தைய ஞாயிற்றுக்கிழமை எங்குமே நடைபெறாத விசித்திரமான முறையில் அற்புதமாக திருப்பலியின் போது மாதாவிற்கு கல்யாண அறிக்கை வாசிக்கப்படும். ஜனவரி மாதம் 14-ம் தேதி பிற்பகல் 6 மணிக்கு கொடியேற்ற விழா நடைபெறும். ஒவ்வொரு நாளும் காலையில் இரண்டு திருப்பலியும், மதியம் 2 மணிக்கு இறை இரக்கத்தின் செபமாலையும், மாலை 6 மணிக்கு ஜெபமாலையும் அதைத் தொடர்ந்து மறையுரை, ஆசீர்வாதம் நடைபெறும்.

புனித திருக்கல்யாண மாதா தேர்ப்பறை உலகிலேயே எங்கும் இல்லாத சிறந்த அமைப்பாக, மிகப்பெரிய அளவு கொண்ட மிகவும் அழகிய தோற்றம் கொண்டது. வருடந்தோறும் ஜனவரி மாதம் 22- ம் தேதி 9-ம் திருவிழா அன்று மாலை 5 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட தேரின் முன்னால் மக்கள் வெள்ளம் போல் கூடி விடுவார்கள். தேர்ப்பவனி பார்ப்பதற்காக அந்த நேரத்தில் ஆலய பீடத்தில் வைக்கப்பட்டுள்ள திருக்கல்யாண அன்னை திருவுருவத்தை ஊர்ப்பெரியவர்கள் அலங்கரிக்கப்படடுள்ள தேரில் வைப்பதற்கு எடுத்து கொண்டு வந்து அதற்கென்று அலங்கரிக்கப்பட்டுள்ள சிம்மாசனத்தில் வைப்பார்கள். அந்த நேரத்தில் கூடி நிற்கும் மக்கள் கண் இமைமூடாமல் அந்த தாயை பார்த்துக் கொண்டே நிற்பார்கள். உடனே ஊர் மக்கள் தந்தையின் இல்லத்திற்கு சென்று தந்தையை தேரின் முன்னால் அழைத்து வருவார்கள்.

தந்தை அவர்கள் தேரின் முன் நின்று ஜெபம் சொல்லி, தேரை சுற்றி மந்திரிப்பார்கள். உடனே உபதேசியார் கிருபை தயாபரரான மாதா ஜெபத்தை சொல்லி முடித்த உடன் பெரியவர்கள் விருத்தம் படிப்பார்கள். படித்து முடித்த உடன் தேரை இழுப்பதற்காக தேரில் மாட்டப்பட்டிருக்கும் வடக்கயிரை பிடித்து இழுங்கள் என்று சொல்வார்கள் அப்போது ஆயிரக்கணக்கான மக்கள் வடக்கயிரை பிடித்து இழுப்பார்கள். அப்படி இழுக்கும் போதும்



தாயே மரியே, மரியே தாயே, மரியே வாழ்க, தாயே வாழ்க என்று உணர்ச்சி வசப்பட்டு பல முறை சொல்லி வரும்போது, பவனியாக வரும் அந்த அன்னையின் முகத்தில் ஒரு மகிழ்ச்சியான புன்னகையை பார்க்க முடியும். அப்போது அந்த புன்னகையில் இருந்து வரும் ஒளி கூட்டத்தில் உள்ள அனைவரையும் சூழ்ந்து கொள்ளும். அந்த நேரத்தில் அந்த தாயின் முகத்தைப் பார்பதற்கு கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். அப்போது அந்த கூட்டத்தில் உள்ளவர்களின் உதடுகள் தன்னை அறியாமலேயே அந்த திருக்கல்யாண அன்னையை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக நன்றி சொல்லி புகழ்பாடி கொண்டே போவார்கள். இதை நாம் அனைவரும் நேரில் பார்க்கலாம். திருவிழாவிற்கு வரும் அனைத்து பக்தர்களும் தேர்ப் பவனியைக் கண்டு மகிழுங்கள். இறைவனுக்கு நன்றி!

- **M. இருதயராஜ்,** ரூபி ஸ்டோர், பொற்பை

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்



**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**02-03-2013 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 2354 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1966 பேர் |
| சுகப்பிரசவம் | - | 1584 பேர் |
| நற்சுகம்பெற | - | 2804 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 2041 பேர் |
| தேவஅழைத்தல் | - | 1785 பேர் |
| வேலைகிடைக்க | - | 2505 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 2947 பேர் |
| குடும்பசமாதானம் | - | 3115 பேர் |
| குடும்பநலன் | - | 2746 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 2419 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 2828 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 2184 பேர் |
| மனஅமைதிக்காக | - | 2620 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 1820 பேர் |
| மனமாற்றமடைய | - | 2384 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 2413 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 2374 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 2251 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 2648 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 1532 பேர் |

**அருள்தரும் இமயமே!**
**திருக்கல்யாணத் தாயே!**
**உம்பிள்ளைகளுக்கா**
**வேண்டிக்கொள்ளும்.**
**- பங்குத்தந்தை**

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**
**kalyanamatha@gmail.com**

# உயிர்த்தெழுவோம் . . .

1. உறவிலிருந்து பிரிக்கும் பிரிவினைக் காரணிகளிலிருந்து...
2. அன்பிலிருந்து திசைமாற்றும் பகைமை வெறியிலிருந்து...
3. எதிர்கால இலட்சியத்திலிருந்து திசை மாற்றும் சுயநலப் போக்கிலிருந்து...
4. இறைபணியில் ஈடுபடாமல் தடைசெய்யும்.போலி கவர்ச்சிகளிலிருந்து...
5. இறையாட்சிப் பணியிலிருந்து புறம்பாக்கும் தவறான வழி முறைகளிலிருந்து...
6. ஒற்றுமைவாழ்விலிருந்து பிரிக்கும் பிரிவினை சக்திகளிலிருந்து...
7. மனித நேயத்திலிருந்து சிதைக்கும் கீழ்த்தரமான செயல்களிலிருந்து...
8. வளர்ச்சியிலிருந்து தடைசெய்யும் பிறரை குழி தோண்டிப் புதைக்கும் போக்கிலிருந்து...
9. இறைமையிலிருந்து விலகச் செய்யும் உலக ஆதாயப் போக்கிலிருந்து...
10. இறை அனுபவத்திலிருந்து சிதைத்து விடும் சில்லறைத்தனமான போக்கிலிருந்து...
11. பண்பாட்டு நெறியிலிருந்து பாழ்படுத்தும் சீரழிவு கலாச்சார பொருளாதாரப் போக்கிலிருந்து...
12. அறநெறி வாழ்விலிருந்து விழத்தாட்டும் பாவ போக்கிலிருந்து உயிர்த்தெழுவோம், பலரையும் உயிர்த்தெழச்செய்வோம் இத்தகைய தீய கட்டுக்களிலிருந்து விடுபடுவோம். வாழ்வின் முழுமை பெறுவோம்...

– அருள்பணி. **ஆரோக்கியராஜ்,**

# திருக்கல்யாண மாதாவின் திருமணம்



நம் அன்பு அன்னை திருக்கல்யாண மாதா, சுவக்கீன், அன்னம்மாள் என்ற தம்பதியர்களுக்கு மகளாக, தாவீது அரசகுல மகளாக பிறந்தவள். அழகு மிகுந்த நம் அன்னைமரிக்கும் திருமண வயது வந்தது. இறைவனின் சித்தப்படி, அன்னையின் திருமண சுயம்வரத்துக்கு வருபவர்களின் கையில் கோல் கொண்டு வர வேண்டும். அந்த கோலில், யார் கையில் இருக்கும் கோல், பூக்கின்றதோ அவருக்குத்தான் நம் அன்னைமரி என்று அறிவிக்கப்பட்டது. உடனே பெரிய தனவான்கள், அரச குல மகன்கள், பொன்னாலும், வெள்ளியினாலும், கோல்கள் கொண்டு தேர்களிலும், குதிரைகளிலும், பொன்னாடை, ஆபரணங்களோடு வந்து சேர்ந்தார்கள். சுயம்வரம் தொடங்கியது. அந்த சமயத்தில் அந்த ஊரில், வாழ்ந்து வந்த, தச்சுத் தொழில் செய்பவரான, நீதி, நேர்மைதவறாத, இறைபக்தி, உள்ளவராக வாழ்ந்து வந்த, சூசை என்பவர், அடுப்பங்கரையில், கிடந்த ஒரு வெள்ளைக் கம்பு ஒன்றை எடுத்துக் கொண்டு வருகிறார். அவருடைய தாய், ஆமாம் எல்லாரும் வெள்ளித் தடியும், பொற்கோல்களும் கொண்டு வந்திருக்கிறார்களாம். நீ இந்த வெள்ளைக் கட்டையை கொண்டு போகிறாயே உன் கோலா பூக்கப் போகிறது என்று சலித்துக் கொண்டார்களாம். ஆனால் என்ன அதிசயம், பாருங்கள்.

இறைவனின் சித்தம் நம் அன்னை மரியாளுக்கு ஏற்ற துணை சூசையப்பர் கையில் உள்ள கோல் பூத்துக் குலுங்குகிறது. நம் அன்னை மரியாளுக்கும், சூசையப்பருக்கும் திருமணம் நடக்கிறது. நவீன முறையில் பொன்னாடை ஆபரணங்களையோ, ஆடம்பர செயல்களையோ இறைவன் விரும்பவில்லை. ஆலயத்தில் குருக்கள் முன்னிலையில், மக்கள் வெள்ளம் திரண்டுள்ள இடத்தில், நம் அன்பு அன்னை மரியாவும், துசையப்பரும் அந்த காலத்து முறைப்படி மோதிரம் மாற்றி, திருமணத்தை நிச்சயித்து, மணவாளியாக, மணவாளராக இறைவனுக் குகந்தவர்களாக ஏற்றுக் கொள்ளப் படுகிறார்கள். ஆனால் எப்பொழுதும் நம் அன்னை திருக்கல்யாண மாதா தன் கன்னிமையை இழக்கவில்லை எப்போதும் இறைவன் சித்தத்தை நிறைவேற்றியே வாழ்ந்து வந்தாள் என்பது பெருமைக்குரியது.



–**ச. ரெஜினாள் மேரி,** பொற்பை




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

- வேலைகிடைத்ததற்குநன்றி -**சுனில்**,பொழியூர்
- நல்ல சுகம் கிடைத்தற்கு நன்றி - **ஆன்றனி அல்காந்தர்**,சென்னை
- இறைவன் செய்த அனைத்திற்கும் நன்றி - **வின்சென்ட**, நாகர்கோவில்
- வெளிநாட்டில் வேலை கிடைத்தற்கு நன்றி - **சுமன்,** பாரசாலை
- திருமண வரம் கிடைத்ததற்கு நன்றி - **கிறிஸ்டோபர் ரொனால்**, ராஜாவூர்
- அறுவைசிசிச்சை நல்ல படியாக நடந்ததற்கு நன்றி - **அந்தோணி சித்ரா**,பொற்பை
- தொழில் முயற்சியில் வெற்றி கிடைத்தற்கு நன்றி - **சேவியர்**, அழகப்பபுரம்
- குழந்தைகளுக்கு நல்ல சுகம் கிடைத்தற்கு நன்றி - **இராஜேந்திரபிரபு**, பொற்பை
- புற்று நோயிலிருந்து சுகம் கிடைத்தற்கு நன்றி - **மேரிபிலோமி,** கருங்குளம்
- வெளிநாட்டில் வேலை கிடைத்தற்கு நன்றி-**ஜோன்கில்பா,**இராமன்துறை
- இருதய அறுவைசிசிச்சை நல்ல படியாக நடந்ததற்கு நன்றி - **புஸ்பா,**குளச்சல்
- தொழில் முன்னேற்றத்திற்கு நன்றி - **செல்வராஜ்,**இனயம்புத்தன்தறை
- குழந்தைவரம கிடைத்தற்கு நன்றி - **ஆண்டனி , அகல்யா**-இராமன்துறை
- குடும்ப நலனுக்கு நன்றி - **சேவியர்,** அழகப்பபுரம்
- நல்ல சுகம் கிடைத்தற்கு நன்றி - **அன்னா தேவராஜ்,** இராமன்துறை
- உடல் சுகம் கிடைத்தற்கு நன்றி - **அந்தோணி சேவியர்,**கொழுந்தட்டு
- மாதா செய்த அனைத்திற்கும் நன்றி - **ராஜா,சபீனா**- குரும்பூர்
- திருமணம் நல்ல முறையில் நடைபெற்றதற்கு நன்றி - **ஜஸ்டின், டிலக்டா**-குரும்பூர்
- திருமணம் நல்ல முறையில் நடைபெற்றதற்கு நன்றி-**புஸ்பாபிரதீப்**,மார்த்தாண்டம்.
- கடவுள் செய்த அனைத்திற்கும் நன்றி - **ஜாரஜ்,**மேக்காமண்டபம்
- நல்ல முறையில் குழந்தை பிறந்ததற்கு நன்றி - **செல்வகுமார்,சுதா**-தஞ்சை
- மாதா செய்த உதவிக்கு நன்றி - **ஸ்டாலி,** வெட்டுக்காடு
- குடும்ப நலனுக்கு நன்றி- **சுதர்சன்,** உவரி
- கப்பலில் வேலை கிடைத்ததற்கு நன்றி - **ஜெகன்,** இராஜாக்கமங்கலம் துறை
- வேலை கிடைத்ததற்கு நன்றி - **மரிய கிளிட்டாஸ்,** கொட்டில்பாடு
- தொழில் முன்னேற்றத்திற்கு நன்றி -**சகாயதாஸ்,** கொட்டில்பாடு
- 7 வருடங்களுக்கு பின் குழந்தைவரம் கிடைத்ததற்கு நன்றி- **ராஜா,தேவி**- குளச்சல்
- குடும்ப நலனுக்கு நன்றி-**கிறிஸ்துதாஸ்,** மார்த்தாண்டம்
- திருமணவரம் கிடைத்ததற்கு நன்றி -**வெலிங்டன்,** சென்னை
- குழந்தைவரம் கிடைத்ததற்கு நன்றி -**ஜேம்ஸ்,பவித்ரா**- கோவை
- இரண்டுவருடங்களாக இருந்து வந்த அலர்ஜி குணமானதற்கு மாதாவுக்கு நன்றி.
  - **ஜெ. ஜெனிட் அஜிதா,** சாத்தூர்.
- திருமணவரம் குழந்தை பாக்கியம் தந்ததற்கு திருக்கல்யாண அன்னைக்குநன்றி.
  - **வெ.செல்வராஜ் குடும்பம்,** சேர்ந்தமரம்.

- ☯ எனது மகள் எஸ். லின்சிக்கு திருமணம் நல்ல முறையில் நடந்தேறியதற்கு நன்றி. - **எஸ்.ராணி**, மணல்குண்டு
- ☯ என் குடும்பத்திற்கு செய்து வந்த அனைத்து காரியங்களுக்கும் கோடி நன்றிகள். - **எஸ். ஆரோக்கிய ஜாண் பீட்டர்.**
- ☯ 10-ம் வகுப்பில் 454 மதிப்பெண்கள் கிடைத்ததற்கும், நல்ல வீடு அமைந்ததற்கும் நன்றி. - **மார்ட்டீனா.**
- ☯ சொந்தவீடு வாங்கியதற்கு நன்றி. - **ஜாண்ராணி.**
- ☯ திருமணம் நடைபெற்றதற்கு நன்றி. - **விக்டர் ஜோஸ்**
- ☯ உடல், உள்ள நலன், நல்ல வாழ்க்கையும் கொடுத்தமைக்கு அன்னைக்கு கோடான கோடி நன்றி. - **ராஜா குணா.**
- ☯ என் குடும்பத்திற்கு செய்து வந்த அனைத்து காரியங்களுக்கும் மாதாவுக்கு நன்றி. - **லியோ விக்டர் ராஜா**
- ☯ 11 வருடங்களுக்கு பிறகு குழந்தை வரம் கிடைத்ததற்கு நன்றி. -அமுதா, தூ-டி.
- ☯ நல்ல சுகம் கிடைதததற்கு நன்றி - **தாமஸ்,** அழகப்பபுரம்
- ☯ திருமணம் நல்லமுறையில் நடந்ததமைக்கு நன்றி. **பிரிஸில்டா,** நாகர்கோவில்
- ☯ நல்ல இல்லம் அமைந்ததற்கு நன்றி. -**சில்வெஸ்டர் உஷா டென்சில்,** சென்னை
- ☯ சுகப்பிரசவம் கிடைத்தமைக்கு நன்றி, - **பாத்திமா,** குழந்தைஇயேசு நகர்
- ☯ திருமண காரியங்கள் தடையின்றி நடந்தமைக்கு நன்றி.-**ஜெயந்தி,** ராஜாவூர்
- ☯ திருமண வரம் கிடைத்தமைக்கு அன்னைக்கு நன்றி! - **சகாயராணி,** புதூர்
- ☯ பொறியியற் படிப்பில் வெற்றி பெற்றமைக்கு நன்றி. - **சீலிராஜ்,** நாகர்கோவில்
- ☯ திருமணம் மற்றும் குழந்தைபாக்கியம் கிடைத்ததற்கு நன்றி - **பாபு,** விழுப்புரம்.
- ☯ தங்கைக்கு கல்யாணவரம் கிடைத்தமைக்கு நன்றி - **செல்வன்,** ஆனைமலை.

# சாட்சி நேரம்.


**செல்லத்துரை - ஜெலஸ்டின் ஹேமா**- ராஜாவூர்.

எங்களுக்கு திருமணமாகி ஏழு வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் எதுவுமில்லாமல் மிகவும் மனவேதனையோடு வாழ்ந்து கொண்டிருந்தோம். ஒவ்வொரு மாதமும் முதற்சனியன்று விசுவாசத்தோடு இருவரும் செபித்து வந்தோம். அன்னையின் அற்புத அருளால் இப்போது எங்களுக்கு ஒரு அருமையான பெண்குழந்தையை தந்து அபரிவிதமாக ஆசீர்வதித்துள்ளார். அன்னைக்கு நன்றி!

**சந்தணசிலுவை , விஜய மங்கலம்,**

கடந்த மூன்று வருடங்களுக்கு முன் என் வாய் கன்னம் பகுதி முழுவதும் புண் வந்து மிகவும் கஷ்டப் பட்டேன். பல மருத்துவர்களையும் நாடி குணம் கிடைக்கவில்லை. இந்நிலையில் திருக்கல்யாணமாதா ஆலயத்திற்கு முதற்சனி வழிபாட்டிற்கு வந்து அன்னையிடம் வேண்டினேன். ஆச்சரியப்படும் விதமாக ஒரே வாரத்தில் எனக்கு பூரண சுகம் கிடைத்தது. அன்னைக்கே கோடான கோடி நன்றி.

**-பங்குத்தந்தை**



# குருத்துவ அழைத்தல்

குருத்துவம் என்பது ஆண்டவரின் மாபெரும் கொடையாகும். இது ஒரு சிலருக்கு மட்டும் விடப்படும் அழைப்பு ஆகும். திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவருக்கும் விடப்பட்ட அழைப்பு. திருமுழுக்கின் வழியாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவோடும் அவரது வாழ்வோடும், பணியோடும்இணைக்கப்படுகிறான். இதனால் முப்பெரும் பணிகளான அர்ச்சிக்கும் பணி, போதிக்கும் பணி, மற்றும் மக்களை வழிநடத்தும் பணிகளைச் செய்வது கிறிஸ்தவனுடைய கடமையாகப் போற்றப்படுகிறது. தன்னுடைய அளவு கடந்த பேரன்பால் தனது மீட்புப் பணியை தொடர்ந்து ஆற்ற குருக்களை அனுப்பினார். மேலும் தந்தையாம் கடவுள் இறைமகன் இயேசுவை அனுப்பினார். இறைமகன் இயேசு தம் பணிகளை தொடர்ந்தாற்ற திருத்தூதர்களை அனுப்பினார். இன்றைய உலகில் நற்செய்தியை பறைசாற்றுவதற்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அருள்பணியாளர்களாக பணி புரிவதற்கும் திருவழிபாடு நிலைத்து வருவதற்கும் இறைமகன் இயசே குருத்துவ அழைப்புக்கு இறைமக்களை தேர்ந்தெடுக்கிறார்.

இன்றைய உலகில் கடவுள் தாம் விரும்பியவர்களை அழைக்கிறார். “உன் தாயின் வயிற்றிலிருந்து நீ உருவாகும் முன்பே உன்னை நான் தேர்ந்து கொண்டேன்”. என்று எரேமியா தீர்க்கதரிசி புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் கடவுள் எரியும் புதரில் மோயீசனை அழைத்தார். வீசும் காற்றில் எலியாசை அழைத்தார். இப்படி எத்தனையோ புனிதர்களை இறைவன் நற்செய்தி பணிக்கு அழைக்கின்றார். இறைமகன் இயேசு தம் பணிக்கு திருத்தூதர்களை அழைக்கின்றார். திருத்தூதர்கள் இறை அழைத்தலுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்கள். நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் தான் உங்களை தேர்ந்து கொண்டேன், நற்செய்தி அறிவிப்பு என்பது என்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்கள் இறையாட்சி பாதையின் வழி நடத்த குருக்களை இறைவன் தேர்ந்தெடுத்துள்ளார். குருக்களே! நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர் அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தார். அவர்களது உரிமைச் சொத்தான மக்கள் நீங்கள் எனவே உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மை மிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணியும் கடமையுமாகும். உலகிலே சிறந்த பணி நற்செய்தி பணி. இதை விட இந்த பணிக்காக துறவற வாழ்க்கைக்காக சிறப்பு அழைப்பு பெற்று நமது துறவியர்கள் அனைவரும் கடமை பெறுகிறார்கள்.

குருக்களின் பாதுகாவலரான புனித ஜாண் மரிய வியான்னி என்பவர் கூறும் போது குருக்கள் மக்களின் ஆன்மீகத் தேவையை நிறைவேற்ற அனுப்பப்படுகிறவர்கள் என்பார். இறை மகன் இயேசு சீடர்களை அழைத்தார் தம்மோடு வைத்துக்கொள்வதற்கு அல்ல மாறாக அவர்களை அனுப்புவதற்காகவே அழைக்கப்பட்டு அனுப்பப்படுவதே திரு அவையின் இயல்பு. அழைக்கப்பட்டு அனுப்பப்படுவதற்காகவே இறைவன் மோசேயை அழைத்தபோது கூறினார், என் மக்களின் துன்பங்களை கண்டேன். (வி.ப 2:3) திருமுழுக்காலும் அருள் அடையாளங்களாலும் தம் மீட்பு பணியைத் தொடரவே பணிக்குருத்துவத்தை ஏற்படுத்தினார்.

தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றவே என்னை ஆண்டவர் இப்பணிக்கு அழைத்துள்ளார்.திருத்தூதர் தோமா இந்தியாவுக்கு வந்தார். புனித பிரான்சிஸ் சவேரியார் மறை பணியாளராய் நம் மறைமாவட்டத்தில் அரும்பணியாற்றி நமக்கு கிறிஸ்துவ விசுவாச நம்பிக்கையூட்டினார். இன்று நாமும் இப்பணிக்கு அனுப்பப்படுகிறோம்.

– **A.மரிய பாக்கிய சீலி,** சங்கரன்குடியிருப்பு

# பரலோகம் பூலோகம் போற்றும் திருக்கல்யாண அன்னையின் திருமண அறிக்கை



பொத்தக்காலன்விளையில் குடிகொண்டிருக்கும் தாவீதின் குலத்தவரான தந்தை யாக்கோபு தாய் லீதியாள் இவர்களின் திருநிறைச் செல்வன் சூசையப்பருக்கும், மேற்படி இடத்திலே குடிகொண்டிருக்கும் தாவீது இராஜ குலத்தில் உதித்த தந்தை சுவக்கீன், தாய் அன்னம்மாள் இவர்களின் அருந்தவப் புதல்வியான மரியாளுக்கும் ஜனவரி 23ம் தேதி திருமணம் நிச்சயிக்கப்பட்டதன் நினைவாக நிகழும் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் நாள் மாலை 6.00மணிக்கு புனித மிக்கேல் அதிதூதரின் திருவுருவ சப்பரப்பவனியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் பக்தகோடிகள் சூழ்ந்து நிற்க மேள வாத்தியங்கள் முழங்க வாணவேடிக்கைகள் அதிர, பாடகர்கள் பண்ணிசைக்க ஆலய மணிகள் ஒலிக்க கொடியேற்றம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஒன்பது நாட்கள் நவநாள் வழபாடுகளும் திருக்கல்யாண மாதா நிச்சயதார்த்த தினமாகிய 23-ம் தேதி ஆடம்பரத் திருப்பலியும் நடைபெறும் என்று பறைசாற்றப்படுகிறது.

**- பங்கு மக்கள்**

---



## “அருள்தரும் இமயம்” திருக்கல்யாணத்தாய்

## அருள்தரும் ஜெபம்

பொற்பை மாநகரில் அருள்தரும் இமயமாய் வீற்றிருக்கும் எங்கள் அன்புத் தாயே! உம்மைவணங்குகிறோம். அன்பும், பாசமும் கொண்டு எம்மைபாதுகாக்கும் திருக்கல்யாண அன்னையே! பரமதந்தையிடம் எங்களுக்காக பரிந்து பேசுங்க அம்மா! நம்பிக்கையோடு உம்மைநாடி வருவோருக்கு தீராத நோய்களினின்று விடுதலை தந்து ஆறுதல் அளிக்கும் அன்னையே! நன்றியால் உம் பொற்பாதம் பணிகின்றோம் அம்மா!

திருக்கல்யாணத் தாயே, வரங்களை மழையென பொழிபவரே! நற்சுகத்தையும், மன அமைதியையும் நிறைவாய் தாருங்க அம்மா! ஞானத்திலும், அறிவிலும் வளர்ந்திட , வேலை வாய்ப்பும், வாழ்க்கைத் தரமும் பெற்றிட உம் திருமகன் இயேசுவிடம் மன்றாடும் அம்மா. எங்கள் உழைப்பு, தொழிலை ஆசீர்வதித்து போதிய மழையை பொழிந்து விளைச்சலை பெருக்கும் அம்மா ! இல்லங்களில் சிறப்பாக, திருமணம் நடந்தேறவும், குழந்தை பாக்கியம் கிடைத்திடவும் கருணை வரம் புரியும் அம்மா! எங்கள் அன்பு நிறை திருக்கல்யாண அன்னையே! எம்மில் மனித நேயம் வளர்ந்திட வரம் அருளும் அம்மா! உமது பரிந்து பேசுதலின்வழியாக நாங்கள் பெற்றுக் கொள்ளும் வரங்கள், கொடைகளுக்கு ஈடாக எங்கள் அயலாரின் துயர் துடைக்க நல்ல மனம் தாருங்க அம்மா ! நாங்கள் கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவர்களாக வாழ வரமருளும் தாயே ! ஆமென். தூய திருக்கல்யாண அன்னையே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

**-பங்குத்தந்தை**

### திருத்தல மண்ணின் அருட்சகோதரிகள் வாழ்த்துகிறார்கள்

சகோதரி **லூக்காஸ்**

சகோதரி **பொனிப்பாஸ்**

சகோதரி **மெர்சி**

சகோதரி **கத்தரின் நிர்மலா**

சகோதரி **புளோரா**

சகோதரி **பெமிலா**

சகோதரி **மல்லிகா**

சகோதரி **ஜோசபின் பொக்கிஷம்**

சகோதரி **ஜெஸிந்தா**

சகோதரி **மெல்லா**

சகோதரி **கபிரியேல் லிசினாள்**

### திருத்தலத்தில் தற்போது பணிபுரியும் திருச்சி, புனித அன்னாள் சபை அருட்சகோதரிகள் வாழ்த்துகிறார்கள்

சகோதரி **மைக்கிள்**

சகோதரி **எக்பர்ட்**

சகோதரி **லீமா ரோஸ்**



# அருட்திரு பாக்கியராஜ் அடிகளாரின் வாழ்த்துக்கள்

## (திருத்தல மண்ணின் 5ம் குரு)



நீங்கள் என்னை தேர்ந்தெடுக்கவில்லை, நான் தான் உன்னைத் தேர்ந்துகொண்டேன் என்ற இறைவனின் விருது வாக்கினை எனக்குக் கொடுத்து என்னை குருவாக தேர்ந்தெடுத்த எம் திருக்கல்யாண மாதாவிற்கு நன்றி! அருள் தரும் இமயம் திருக்கல்யாண மாதாவின் ஆலயம் இன்று திருக்கல்யாண மாதா திருத்தலம் என்று அழைக்கப்படுவதை எண்ணி பெருமைப்படுகிறேன். இது ஒரு மகிழ்ச்சிகரமான நாள். இந்த மங்களகரமான நாளில் நாம் அனைவரும் நம் தாயாம் திருக்கல்யாண தாயைப் போன்று இறை காரியங்களனைத்தையும் ஒரு மனத்துடன் செய்யவே அழைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வேளையில் திருக்கல்யாண மாதா ஆலயம் திருத்தலமாக உயர்த்தப் படுவதற்கு ஆணி வேராக இருந்து உழைத்த அனைத்து முன்னாள் மற்றும் இந்நாள் பங்குத் தந்தையர்கள், நம் முன்னோர்கள், பங்கு மக்கள் அனைவரையும் இந்நாளில் நினைவு கூருகின்றேன்.

அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்து இணைந்து ஜெபித்து, இணைந்து பணிபுரிந்து நம் தாய் திருக்கல்யாண அன்னையின் புகழ் உலகமெங்கும் பரவவும், நம் திருக்கல்யாணத் தாய் திருத்தலம் தலைசிறந்த திருத்தலமாக திகழ, தொடர்ந்து பணிசெய்து அன்னையின் திருத்தலத்தை நாடிவரும் பக்தர்களை அன்புடன் உபசரித்து அன்னையின் அருளாசியைப் பெற உங்கள் அனைவரையும் இந்நாளில் வாழ்த்துகிறேன்.

# கேட்ட வரம் கிடைக்காமல் இல்லை!

1. அல்பேனியாவில் மதங்கள்இல்லை.
2. ஆப்கானிஸ்தானில் இரயில்கள்இல்லை.
3. ஆப்பிரிக்காவில் புலிகள் இல்லை.
4. சவுதிஅரேபியாவில்நதிகள் இல்லை.
5. சந்திரனில் காற்று இல்லை.
6. யானையின் துதிக்கையில் எலும்பில்லை.
7. சுண்டெலிக்கு வியர்ப்பதில்லை.
8. மண்ணுளிப்பாம்புக்கு கண்கள் இல்லை.
9. வௌவாலுக்குப் பார்வை இல்லை.
10. மலைப்பாம்புக்கு விஷமில்லை.
11. பாம்பின்கண்களில் இமை இல்லை.
12. பாம்பிற்கு செவியில்லை.
13. வண்ணத்துப்பூச்சிக்கு வாயில்லை.
14. முதலைக்கு நாவில்லை.
15. கோலாக்கரடி நீர் அருந்துவதில்லை.
16. பாலில் இரும்புச்சத்து மட்டும் இல்லை.
17. யமுனை நதிகடலில் கலப்பது இல்லை.
18. வடதுருவத்தில் நிலப்பரப்பே இல்லை.
19. ஆசைக்கு அளவு இல்லை.
20. அரசியல்வாதியிடம் உண்மை இல்லை.
21. திருக்கல்யாணத்தாயிடம்கேட்டவரம் எதுவும் கிடைக்காமல்இல்லை. – **A.ஜாக்ஸன்**, பொற்பை



# அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

அதமருள் நிறைந்த அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

ஆண்டவரின் தாய் அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

இரக்கம் நிறைந்த அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

ஈகை புரியும் அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

உலகம் போற்றும் உத்தமஅன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

ஊரின் பாதுகாவலியான அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

எத்திக்கும் புகழ்பெற்ற அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

ஏழைகளின் துயர் தீர்க்கும் அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

ஐயம் தவிர்க்கும் அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

ஒருபோதும் ஓயாது அருள் புரியும் திருக்கல்யாண மரியே வாழ்க

ஓவியத்தின் சிகரமாய்த் திகழும் அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

ஔடதமாய் விளங்கும் அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க

அஃது அனைத்தும் நிறைந்த அன்னை திருக்கல்யாண மரியே வாழ்க



**-S. ரெஜினாள் மேரி,** பொற்பை

# மார்ச் 2013 – வரவு செலவு விபரம்

**வரவுகள் :** முன்னிருப்பு

| | | |
|---|---|---|
| வங்கியில் ரூ.524060.00<br>கையில் ரூ.2845.00 | | **526905.00** |
| திருப்பலி 530X70 (முதற்சனி 441 அலுவலகம் 89) | | 37.100.00 |
| ஞாயிறு காணிக்கை பொற்பை – 14450.00<br>கிளை பங்குகள் – 1650.00 | | 16100.00 |
| ஆலய உண்டியல்கள் மூலம் (1,99,300+155) | | 199455.00 |
| பழைய பொருட்கள் விற்றது | | 100.00 |
| ஆலய வீடு வாடகை | | 1000.00 |
| முதல் சனி கடைகள் | | 6885.00 |
| அந்தோணியார் கெபி காணிக்கை | | 174.00 |
| மண்டபம் வாடகை | | 1000.00 |
| பள்ளிகள் மூலம் (4088+989) | | 5077.00 |
| வங்கி வட்டி வரவு | | 5555.00 |
| பைன் மூலம் வரவு | | 1000.00 |
| உபதேசியார் மூலம் வரவு | | 3100.00 |
| பெரிய வெள்ளி காணிக்கை | | 19170.00 |
| | மொத்தம் | 822621.00 |

**செலவுகள் :**

| | |
|---|---|
| நியூஸ் பேப்பர் | 246.00 |
| போர்வெல் எலக்ட்ரிக் வேலைகள் மற்றும் கூலி ஜேசுதாஸ் | 46243.00 |
| முதல் சனி குருக்கள் படி | 5350.00 |
| மின் சேஞ்சர் (ஆலயம்) | 5850.00 |
| வடக்கன்குளம் திருப்பயணம் 30பேர் பயணப்படி | 4500.00 |
| மேக் டி.வி விளம்பரம் | 4000.00 |
| வாலண்டியர்ஸ் – இனிப்புகள் | 250.00 |
| பார்சல் டெலிவரி சார்ஜ் (குருக்கள் அன்பளிப்பு புத்தகங்கள்) | 650.00 |
| கயிறு வாங்கியது (புதிய பந்தல் போட) | 5500.00 |
| தொலைபேசி மற்றும் செல்போன் கட்டணம் | 882.00 |
| பந்தல் போட சவுக்கு கம்புகள் வாங்கியது | 43400.00 |
| ஆயர் புத்தகங்கள் (மறைமாவட்ட குருக்கள்) | 40000.00 |
| பாஸ்கா மெழுகுத் திரி | 1200.00 |
| வண்டி இன்சூரன்ஸ் | 2000.00 |
| பாத்திர அறை மின்மீட்டர் | 1500.00 |
| மதுரை பயணச் செலவு (குருக்கள் கூட்டம்) | 1500.00 |
| ஆலய முன்பு பந்தல் போட தட்டி மற்றும் கூலி | 45000.00 |
| அந்தோணியார் கெபி பெயிண்டிங் | 8310.00 |
| மின் ஊழியர்கள் படி | 700.00 |

| | |
|---|---|
| பந்தல் போட நார் வாங்கியது | 1000.00 |
| விண்ணப்பங்கள் அச்சடிக்க | 5800.00 |
| வளர்ப்புக் கோழி வாங்கியது (3 எண்ணம்) | 600.00 |
| இண்டிகா சரிபார்க்க | 3080.00 |
| தொடக்கப்பள்ளி யூரினல்கள் சரிசெய்ய மற்றும் பங்களா மணல் சரிசெய்ய, மே.நிலைப்பள்ளி மதில் துளையிட | 4990.00 |
| தியானம் – தேநீர் | 1350.00 |
| நியான் விளக்குகள் சரிசெய்ய | 9200.00 |
| எரிவாயு | 405.00 |
| கோவில் ஆம்ளிபயர் மற்றும் மைக் சரிசெய்ய | 1420.00 |
| ஞாயிறு மறைக்கல்வி பரிசுகள் | 18850.00 |
| கிரெடிட் கார்டு பரிசுகள் (மாணவ, மாணவியர்) | 21662.00 |
| டோபி | 420.00 |
| டீசல் பெட்ரோல் ஜெனரேட்டர் மற்றும் வாகனம் | 7963.00 |
| மளிகை சாமான்கள் | 3100.00 |
| பழங்கள் | 1747.00 |
| தண்ணீர், பால், மீன், காய்கறி மற்றும் ரேசன் பொருட்கள் | 2420.00 |
| பலி தந்தையர் படி | 1400.00 |
| ஸ்டேஷனரி | 1213.00 |
| மருந்துகள் | 556.00 |
| வண்டி வாடகை – டிரக்கர் | 200.00 |
| உதவித் தொகைகள் | 3250.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஊதியம் | 2000.00 |
| மாலை படிப்பு ஆசிரியர்கள் ஊதியம் பிப்ரவரி & மார்ச் | 3675.00 |
| இரவுக்காவலர் ஊதியம் | 2500.00 |
| 2 துப்புரவு பணியாளர்கள் ஊதியம் | 7000.00 |
| பங்குத் தந்தை படி | 6000.00 |
| பங்குத் தந்தை திருப்பலி படி | 1500.00 |
| அருட்சகோதரர் படி | 1000.00 |
| புனிதவரி : திருப்பலி 530X5 = 2650<br>500X50=25000 | 27650.00 |
| மொத்தம் | 366032.00 |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ.822621.00 |
| மொத்த செலவு | ரூ. 366032.00 |
| இறுதியிருப்பு | ரூ. 456589.00 |

## இருப்பு விபரம்

| | |
|---|---|
| வங்கியில் | ரூ. 450865.00 |
| கையில் | ரூ. 5724.00 |
| மொத்தம் | ரூ. 456589.00 |

# படைப்பின் ஆண்டவர் விரும்பும் அழகு



பிறப்பின் அழகு இறைசித்தம் நிறைவேற்றுதல்
தலைக்கு அழகு பணிந்துநிற்றல்
கண்ணுக்கு அழகு கருணைகாட்டுதல்
காதுக்கு அழகு நல்லதைக்கேட்டல்
முகத்திற்கு அழகுபுன்னகைபுரிதல்
அகத்திற்கு அழகுநம்பிக்கையாகஇருத்தல்
குணத்திற்கு அழகுநேர்மையாகவாழ்தல்
வாய்க்கு அழகுஉண்மைபேசுதல்
குரலுக்கு அழகுபிரார்த்தனை செய்தல்
இதயத்துக்கு அழகுமனிதநேயம் காட்டுதல்
கைகளுக்கு அழகுதானம் செய்தல்
கால்களுக்கு அழகுசான்றோர் வழி நடத்தல்
இளமைக்கு அழகுநற்செயல் புரிதல்
முதுமைக்கு அழகு வழிகாட்டுதல்
வாழ்வின் அழகு.

படைப்பின் ஆண்டவருக்கும்,
காத்து வரும் திருக்கல்யாணத்தாய்க்கும் நன்றி கூறுதல் !

**D. லிற்றில் அமல ராணி**
பொத்தக்காலன்விளை.

# நல்ல பழக்க வழக்கங்கள்



1. எப்போதும் கைக்குட்டை வைத்திருக்க வேண்டும்.
2. பிறரின் முன்னால் பல் குத்துவது, காது குடைவது, மூக்கு குடைவது, தவிர்க்கப்பட வேண்டும்.
3. கொட்டாவி விடும்போதோ, தும்மல் போடும் போதோ, கைக்குட்டையால் வாயை மறைப்பது நல்லது.
4. நடக்கும் போதும், அமரும் போதும், நிற்கும் போதும், நிமிர்ந்த நிலையைக் கொள்க.
5. கால்களை விரித்துக் கொண்டு நிற்கக் கூடாது. நாற்காலியில் இருக்கும் போது கால்களை ஆட்டக்கூடாது.
6. பிறரிடம் அறிமுகப் படுத்தப்பட்டால் நலமா என்று விசாரிக்க வேண்டும்.
7. உறவினர்கள், பெரியவர்கள், நண்பர்களைச் சந்திக்கும் போது, மரியாதையுடன் நலம் விசாரிக்க வேண்டும். வணக்கம் செலுத்த வேண்டும்.
8. புதிதாக ஒருவரை சந்திக்கும் போது, நமது பெயரைச் சொல்லி அறிமுகப் படுத்திக் கொள்ள வேண்டும்.
9. உரையாடும் போது இனிய சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.
10. சத்தமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது.

**– கல்விச் செய்தி மடல்**

# பொற்பை நாயகியின் சிலுவை மகிமை!

**(உண்மைசம்பவம்)**




திருத்தல அறிவிப்புவிழா காணும், பொற்பை திருக்கல்யாணத்தாயின், ஆலய பீடத்தை அலங்கரிக்கும், சிலுவை மரம் அன்னையின் பெருமைக்கு புகழ் கூறும் சிறப்பு பெற்றது. 1970-1972ம் ஆண்டில் அருட்தந்தை அல்போன்ஸ் மரிய காகு அடிகளார் பங்கு குருவாக பணியாற்றிய போது இச்சிலுவை மரம் அன்னையின் அருளால் அற்புதமாக செய்யப்பட்டு ஆலயத்தில் வைத்து அபிஷேகம் செய்யப்பட்டது. இச்சிலுவை மரம் செய்ய தந்தையார் அவர்கள் தச்சரிடம் ஓரே மரத்தால் ஆன சிலுவை ஒன்று வேண்டும் என்றும் நல்ல சிலுவை மரமாக செய்து தரும்படியும் கூறியுள்ளார்கள். அதற்கு அத்தச்சு வியாபாரி பணம் அதிகமாக வேண்டும் என்றும் இல்லாவிடில் சிறிதாகத் தான் செய்து தர முடியும் என்றும் கூறியுள்ளார். உடன் தந்தையார் அவர்கள் எல்லாம் அன்னையின் செயல் என்று கூறி வந்து விட்டார்கள். இந்நிலையில் அவ்வியாபாரி சிலுவை செய்ய மரத்தை வாளால் செதுக்கிய போது, அவருடைய வாளின் முனை உடைந்து போனது. இவ்வாறு பலமுறை தொடர்ந்து நடைபெற்றதால், அவ்வியாபாரி நாகர்கோவில் வியாபரியிடம் செய்து தரும்படி கூறியுள்ளார். அவரும் சம்மதம் கூறி மரத்தை வாளால் செதுக்கிய போது அவருடைய வாளின் பற்கள் உடைந்து போயின. இந்நிலை தொடர்ந்ததால் நாகர்கோவில் வியாபாரி சாத்தை வியாபாரியிடம் தொடர்ந்து இவ்வாறு நடைபெறுகிறதே ஏன் என்று வினவியுள்ளார் அப்போது சாத்தை வியாபாரி பொற்பையில் இருந்து தந்தையார் ஒருவர் தந்தார்கள் நிதிநிலையை எடுத்துக் கூறி இம்மரம் முழுவதையும் ஒரே சிலுவையாக செய்து தரும்படி தன்னிடம் கேட்டார்கள் என்றபோது, நாகர்கோவில் வியாபாரி நீங்கள் செய்தது தவறு, இம்மரம் சிலுவை செய்ய என்றே உருவாக்கப்பட்டது என்றும், உடன் தந்தையாரை சந்தித்து, பேசும்படியும் கூறியுள்ளார்.

இதற்கிடையில் திருக்கல்யாண அன்னை, சாத்தை வியாபாரியின் கனவில் தோன்றி, இம்மரம் என் மகனுக்கு என்றே உருவாக்கப்பட்டது. நீ உடன் இம்மரத்தை ஆலயத்தில் வைத்து ஆராதனை செய் என்றும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். இதனால் மனம் திரும்பிய அவ்வியாபாரி அன்னையின் பாதம் வந்து வணங்கி தந்தையாரிடம் மன்னிப்புக் கேட்டு, தந்தையாரை அழைத்து சென்று, மரத்தை புனிதப்படுத்திய பின் அன்னையின் அருளால் அம்மரம் ஒரே மரத்தால் ஆன சிலுவையாக அழகிய வடிவம் பெற்றது. பின் அவ்வியாபாரி அச்சிலுவையை வாகன செலவில்லாமல் தனது ஆட்களைக் கொண்டே, அன்னையின் ஆலயம் கொண்டு சேர்த்து, நன்றி கூறி சென்றுள்ளார். இவ்வாறு தந்தையார் அவர்களின் முயற்சியாலும், அன்னையின் அருளாலும் ஒரே மரத்தால் ஆன சிலுவை மரம் ஆலயத்தில் அபிஷேகம் செய்யப்பட்டு, ஆராதிக்கப்பட்டு வருகிறது இந்நிலையில் எந்தவித காலமாற்றத்திற்கும் சேதமடையாது, அன்னையின் புகழ் கூறி வரும் அச்சிலுவை மரம் பின்பு ஒரு சமயம் எதிர்பாராத விதமாக அடிப்பகுதியில் நெருப்பு பற்றியபோதும் சேதம் ஏற்படாமல் இன்றளவும் அன்னையின் பெருமைக்கு புகழ் கூறி வருகிறது. என்னே எம் திருக்கல்யாணத் தாயின் மகிமை! திருக்கல்யாண மரியே வாழ்க !!

**– பங்குத்தந்தை,**

# திருக்கல்யாணத்தாயின் காட்சி

கடந்த 2000ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ம் தேதி நாங்கள் மதிய உணவு அருந்திக் கொண்டிருக்கையில் திடீரென வானத்தில் அன்னை மரியாள் குழந்தை இயேசுவோடு ரதத்தில் தோன்றியதைக் கண்டோம். அன்னையைச் சூழ்ந்து வானதூதர்கள் மற்றும் உயிரினங்கள் யாவும் ஆடிப் பாடியபடி தேரோட்ட வீதி வழியாக வந்து ஆலயத்தின் கோபுரம் மீது ஒளியாக இறங்கியதைக் கண்டோம். உடனே நாங்கள் கோவிலினுள் சென்று பார்த்தபோது பாடுபட்ட சுரூபத்தில் உள்ள ஆண்டவரின் நரம்புகள் பச்சை நிறமாக மாறியதையும், காயங்களிலிருந்து இரத்தம் வருவதையும், அவருடைய முகமானது ஒளிர்வதையும் கண்டோம். நாங்கள் பார்த்தவற்றை பங்குத் தந்தை மற்றும் ஊர் மக்களிடம் தெரிவித்தபோது அனைவரும் பக்திப் பரவசமடைந்து அன்னையின் ஆலயம் வந்து ஜெபித்தோம்.



**– ஜெனி, ரெக்ஸ்லின், நிஷா, மெர்சி, லிட்டில் பிளவர்**

# திருக்கல்யாணத்தாய் தரும் வெற்றிப்படிகள்



இறைவார்த்தையின் மூலம் உருவாகுவது ஞானம்
படிப்பின் மூலம் உருவாகுவது அறிவு
சிந்தனை மூலம் உருவாகுவது தெளிவு
பாசத்தின் மூலம் உருவாகுவது நட்பு
வீரத்தின் மூலம் உருவாகுவது தைரியம்
கற்பனையின் மூலம் உருவாகுவது படைப்பு
பழக்க வழக்கங்கள் மூலம் உருவாகுவது உறவுகள்
பொறுமையின் மூலம் உருவாகுவது தன்னம்பிக்கை
தன்னம்பிக்கையின் மூலம் உருவாகுவது விடா முயற்சி
விடா முயற்சியின் மூலம் உருவாகுவது வெற்றி
உழைப்பின் மூலம் உருவாகுவது உயர்வு
தொழுகையின் மூலம் உருவாகுவது இறையருள்
வேண்டுதல் மூலம் உருவாகுவது திருக்கல்யாண
அன்னையின் கொடைகள்

– **J. ஜஸ்டின் ஜெயராஜ்,** பொற்பை

# திருமண வரம் – குழந்தை வரம் தரும் திருக்கல்யாணத் தாய்



நம் அன்பு அன்னையாம் திருக்கல்யாணத்தாயின் பக்தர்களுக்கு திருத்தல அறிவிப்பு பெருவிழா வாழ்த்துக்கள். அன்பின் புகலிடமாய் அருளின் உறைவிடமாய் அற்புதத்தின் இருப்பிடமாய் பொற்பையில் குடி கொண்டிருக்கும் திருக்கல்யாண அன்னையின் அருளும் ஆசீரும் நம் அனைவரோடும் இருப்பதாக.

அன்னை மரியாள் அகில உலகிலும் பல்வேறு இடங்களில், பல்வேறு பெயரில் கொலு கொண்டு மக்களுக்கு குழந்தை வரம் தருகிறாள். நம் எழில் நகரமாம் பொற்பையிலே திருக்கல்யாணத்தாயாக அமர்ந்து தம் மைந்தருக்கு அருள் வரங்களை அள்ளித்தருவது எத்துணை சிறப்பு.

எங்கும் நிறைந்த பரம்பொருளாம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையே தம் உதிரத்தில் சுமந்தவர் அல்லவா, நம் அன்னை? நம் தாய் மரியாளின் திருக்கல்யாணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தல்லவோ நாம் அவர்களை திருக்கல்யாண அன்னை என்று அழைக்கின்றோம். தம் பெயரிலேயே கல்யாண நிகழ்வை கொண்டுள்ள நம் தாய், திருமணம் ஆக வழியின்றி தவிப்போரை திக்கற்றவராக விடுவார்களா? இன்றும் எத்தனையோ கன்னிப் பெண்கள் தம் மனம் நிறைந்த திருமண வாழ்வை, நம் அன்னையின் அருளால் பெற்று மகிழ்வுடனும் நன்றியுடனும் வாழ்ந்து வருகிறார்கள்.

திருமண வாழ்வின் நிறைவு மழலைச் செல்வங்களில் தானே உள்ளது. நம் திருக்கல்யாண அன்னையே குழந்தை வரம் அருளும் அன்னையாகவும் நாம் பார்க்கிறோம். இன்றும் கூட எத்தனையோ தம்பதியர் தம் பெயர் சொல்ல, தம் குலம் தழைக்க ஒரு குழந்தை வேண்டுமென்று ஏக்கத்தோடு நம் திருக்கல்யாண அன்னையை வேண்டுவதும் அவரிடமிருந்து குழந்தை வரத்தை பெற்றுக் கொள்வதும் அற்புதமான ஒரு கொடையாகும். நம் திருக்கல்யாணத்தாயின் அருளால் குழந்தை வரம் பெற்ற அமல புஷ்பம், கோவில் ஸ்டாலின் தம்பதியர், தைலாபுரத்தை சார்ந்த திருமதி. ஜெயசீலி, திரு. சந்தன சூசை, திருமதி, டெய்சி, அழகை நகரை சார்ந்த அந்தோணி சகாய மேரி, 5 ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தை வரம் பெற்ற பீட்டர், அனிதா தம்பதியர், ஏன் 13 ஆண்டுகளுக்குப்பிறகு குழந்தை வரம் பெற்ற திரு. அந்தோணி யேசுதாசன் போன்று எண்ணற்ற சாட்சிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

தம்மைபடைத்தவருக்கே தாயான நம் அன்னை மரியாளுக்கு குழந்தை வரம் வேண்டி தவிப்பவரை தாயாக்குவது மிக சுலபம். நாம் விசுவாசம் என்னும் ஆயுதம் ஏந்தி, அன்னையை நோக்கிய ஜெபம் என்னும் போராட்டத்தை மேற்கொண்டால், கர்ப்பத்தின் கனி என்னும் வெற்றிக்கனியை நம் தாய் தம் குமாரனாம் இறைமகன் இயேசுவிடமிருந்து நமக்கு பெற்றுத்தருவார்கள். குழந்தைகள் கடவுளின் கொடைகள் என்பதையும், அவர்கள் பெற்றோரின் பந்தியை சூழ்ந்துள்ள ஒலிவ மரக்கன்றுகள் என்பதையும் நம் வேதாகமம் தானே நமக்கு சுட்டிக்காட்டுகிறது. தம்மைநோக்கி வேண்டிய குடும்பங்களுக்கு அத்தகைய ஒலிவ மரக்கன்றுகளை இன்முகத்துடன் அருள் வரமாக அன்னை தருவார்கள். இன்னும் ஆயிரமாயிரம் பேருக்கு தரவிருக்கிறார்கள்.

நாமும் நம் திருக்கல்யாணத்தாயின் தாள்பணிந்து நம் வேண்டுதல்களை அன்னையின் பாதத்தில் சமர்ப்பித்து, அவர்களின் கடைக்கண் பார்வைக்காகக்காத்திருப்போம். இன்றும், என்றும் நமக்கு அற்புதம் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கையில் மகிழ்வுடன் திருக்கல்யாணத் தாயின் பக்தர்களாக, புதல்வர் புதல்வியராக வாழ்வோம்.

**த. பீட்டர் அந்தோணி ராஜ்** (ஆசிரியர்)

# திருத்தல பங்குப் பள்ளிகளின் வரலாறு

பொத்தக்காலன்விளையில் 15-01-1926 ஆம் ஆண்டு அன்பு, உண்மை, சேவை என்ற விருது வாக்கு கொண்டு தூய மரியன்னை துவக்கப் பள்ளி அருட்திரு. ஸ்தனிஸ்லாஸ் பங்காரு அடிகள் அவர்களால் தொடங்கப்பட்டது. அதன்பின் புனித வளனார் பெண்கள் துவக்கப்பள்ளி, 1932 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் பின்னர் 1953 ஆம் ஆண்டு பங்குத் தந்தை அருட்திரு. **M.S.** அந்தோணி அடிகளார், இரு பாலரும் படித்து மகிழ துவக்கப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக உயர்த்தி முதன் முதலாக 1955-56ல் **ESLC** தேர்வு எழுதினார்கள்.

பங்கின் இணை ஊரான கொழுந்தட்டிலும் 1937 இல் ஆரம்பிக்கப்பட்ட புனித சவேரியார் துவக்கப்பள்ளி நடுநிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டது. காலப்போக்கில் பக்கத்து கிராமங்களில் பள்ளிகள் பல தோன்றிடவே மீண்டும் துவக்கப் பள்ளியாகி விட்டது.

1985இல் பங்குக் குருவாகப் பொறுப்பேற்ற அருட்திரு. **A.** பீற்றர் ராஜா அடிகளார் அவர்களால் தூய மரியன்னை நடுநிலைப்பள்ளி 1986 ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளியாகவும் 1988 ஆம் ஆண்டு மேல்நிலைப்பள்ளியாகவும் உயர்த்தப்பட்டு நிதி உதவியுடன் அங்கிகாரமும் பெறப்பட்டது.

அன்பு, உண்மை, சேவை என்னும் மூன்று கொள்கைகளையும் விருதுவாக்கியமாய் பெற்றுள்ள எம் பள்ளி கத்தோலிக்க திருச்சபையின் உயரிய மதிப்பீடுகளை இளம் உள்ளங்களில் மலரச் செய்வதையே தம் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகிறது. அறிவு, ஒழுக்கம், திறன், இறைபக்தி, தமிழ் பண்பாடு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, கலைத்திறன்கள் போன்ற பல்வேறு கொடைகளை மாணவர்களுக்குத் தந்து அவர்களை முழு ஆளுமைவளர்ச்சி பெற்றவர்களாக உருவாக்கிட முனைந்து வருகிறது.

கத்தோலிக்க மாணவர்களுக்கு மறைக்கல்வி போதனைகளையும், மற்ற மாணவர்களுக்கு நல்லொழுக்க கல்வியும், ஒவ்வொரு நாளும் காலை முதல் பாட வேளையில் போதிக்கப்படுகின்றன. இது கத்தோலிக்க திருச்சபை நடத்தும் பள்ளியானாலும் சாதி, இன, மத வேறுபாடின்றி அனைத்து தரப்பு மாணவர்களுக்கும் கல்விப்பணி புரிந்து வருகிறது,

கல்வியிலும் ஒழுக்கத்திலும் வருங்கால இந்தியாவின் தூண்களாகிய மாணவர்களை நல்வழிப்படுத்தி, சிறந்த எதிர்காலத்தை உருவாக்க எம் பள்ளி அயராது உழைக்கும். எங்கள் உழைப்பையும், முயற்சிகளையும் திருக்கல்யாண மாதா ஆசீர்வதிப்பாராக.

– **அந்தோனி ஜெயராஜ்**, பொற்பை



# மே – வணக்க மாதம்




மாமரியின் வணக்க மாதத்தின் அடையாளங்கள் 12ஆம் நூற்றாண்டிலேயே காணப்பட்டது. அக்காலத்தில் பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின் நாடுகளில் இறைமக்கள் மே மாதத்தில் மாதாவின் சுரூபத்திற்கு அன்றலர்ந்த மலர்களைச் சாற்றி அலங்கரித்து பாடல்கள் பாடி அன்னையைப் போற்றிக் கொண்டாடினர்.

13ம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டின் காஸ்டில் பகுதி பத்தாம் அல்போன்ஸ் அரசர் மாதாவுக்கு வாழ்த்துக் கவிதை இயற்றி ஒப்புக்கொடுத்தார் என்று மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. 14ம் நூற்றாண்டில் பிரான்சில் உள்ள தலூஸ் நகரின் கவிஞர் மாதா பெயரில் பாடல்கள் இயற்றி, மே மாதம் பாடல் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கினார். சேசு சபையைச் சேர்ந்த ஜாக்பால்ட் என்ற குரு மாதா பெயரில் தோத்திரக்கவிதைகள் இயற்றி மே மாதம் முதல் தேதி காணிக்கையாகப் படைத்தார். அதன்பின் திருமறை ஒழுங்குமுறைப்படி உலகெங்கும் நடைபெறும் வணக்க மாதம் 18ம் நூற்றாண்டில் இத்தாலியில் தொடங்கி, ஜெர்மனி, போலந்து, ஆஸ்திரியா போன்ற நாடுகளிலும் அதன்பின் உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் பரவியது.

மே மாதம் அன்னையின் பக்தி முயற்சிகளில் ஈடுபடும் அனைவருக்கும் 7–ஆம் பத்திநாதர் திருத்தந்தை அவர்கள் 300 நாள் சிறப்பு பலன் உண்டு என்று அறிவித்தார். மேற்கத்திய நாடுகளில் மிகக் கடுமையான குளிர் காலமான பனிக்காலம் முடிந்து அதன் பின் வரும் வசந்த காலத்தைச் சேர்ந்த மாதம் மே மாதம். இக்காலத்தில் கதிரவனின் செங்கதிர் பட்டதும் பனியும், குளிரும் முற்றிலுமாக மறைந்து பசும்புல் தோன்றி செடி, கொடிகள் செழித்து வளர்ந்து, வண்ண வண்ணப் பூக்கள் மலர்ந்து இலைகள் தோறும் கனிகள் தொங்க, பறவை இனங்களின் இன்னிசை ஒலிக்க, மக்கள் மகிழ்ச்சியுடன் ஆடைகள் உடுத்தி ஆலயம் சென்று மாமரியைப் போற்றுவதற்கு ஏற்ற மாதமாக மே மாதம் விளங்கியது.

பழங்காலத்தில் லீலி மலர்களைப் புனிதர்களுக்கும், ஊதா மலர்களை மரித்தோருக்காகவும், ரோஜா மலர்களை திருமறைக்காக தியாகம் செய்த வேதசாட்சிகளுக்கும், ஏனையோருக்காகவும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்னையின் மறைபொருளாக ரோஜா மலர் குறிப்பிடப்படுவது சிறப்புக்குரியதொன்றாகும். தாந்தே என்ற கீர்த்தி பெற்ற இத்தாலியக் கவிஞர் ரோஜா மலரானது பரிசுத்த சினேகத்தின் மலர் என்று வர்ணிக்கின்றார். கன்னி மரியாவின் மன்றாட்டு மாலையில் மறைபொருளின் ரோசா மலரே என்று குறிப்பிடப்பட்டதும் சிறப்புக்குரியதாகும்.

நமது ஊர் பொத்தக்காலன்விளையில் மே மாத மாதா வணக்கம் ஆண்டுதோறும் குடும்பம் குடும்பமாக இணைந்து ஒவ்வொரு நாளும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. தினமும் காலை மே மாத வணக்கத் திருப்பலியும், மாலை சிறப்பு மாலை ஆராதனையும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குடும்பங்களாக சிறப்பிக்கிறார்கள்.பல நாட்களில் பல குடும்பங்கள் இணைந்து திருக்கல்யாண அன்னையின் பக்தர்கள் அனைவருக்கும் இரவு உணவு வழங்கி தங்களுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கிறார்கள்.

– **ஜோசப் ததேயூஸ் ராஜா,** பொற்பை



# மகா பரிசுத்த மாதாவே!

**"அனைத்து அருளும் புனிதமும் சங்கமிக்கிற சத்தியத் தாயே அன்னை மரியாள்"** *– புனித பீட்டர் கிறிஸோ லெகுஸ்*

பரிசுத்தம் பணத்தில் கிடைப்பது அல்ல அறிவில் கிடைப்பது அல்ல; மாறாக நம்மைப் படைத்த பரமனோடு கொண்டுள்ள உறவின் நெருக்கத்தில் கிடைப்பதாகும். கடவுளின் உடனிருப்பில் மனிதன் பரிசுத்தம் அடைகிறான். கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள உறவில் பரிசுத்தம் பரிமாறப்படுகிறது. (எசா. 57:15). ஏனெனில் கடவுள் தனது புனிதத் தன்மையைத் தன்னுடைய மக்களில் பிரதிபலிக்க விரும்புகிறார். "நான் பரிசுத்தமாய் இருப்பது போல் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்" (லேவி.19:2) இந்தப் பரிசுத்தத்தைத் தனது மீட்புச் செயலிலும் வெளிப்படுத்துகிறார். (ஓசா. 40-55)

மனித வாழ்வு கடவுளின் பிரசன்னத்தைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். அதாவது அன்னை மரியா போன்று கடவுளைப் பிரதிபலித்துப் பரிசுத்த வாழ்வு வாழ வேண்டும். "அன்னை மரியா தனது கீழ்ப்படிதலுள்ள வார்த்தையால் (ஆகட்டும்) மேலான புண்ணியத்தைச் சேர்த்துக் கொள்கிறார்" என்று பேராயர் புல்டன் சீன் ஜே கூறுகிறார். பழைய ஏற்பாட்டில், 'உண்டாகட்டும்' என்ற 'ஒரு' வார்த்தையால் படைப்புகள் உண்டாயின. புதிய ஏற்பாட்டில், 'ஆகட்டும்' என்ற 'ஒரு' வார்த்தையால் கடவுள் கன்னியின் கருவில் கருத்தரிக்கிறார்.

''கடவுளுக்கு அருகாமையில் இருப்பதில் தான் பரிசுத்தம் பரிணமிக்கிறது. கடவுளின் உடனிருப்பில்தான் பரிசுத்தம் பரிமாறப்படுகிறது. ஆனால் மரியாளில் கடவுளேசங்கமமானது. பரிசுத்தத்தின் ஊற்றே மரியாளில் தஞ்சம் அடைந்திருப்பது போலாகும்." என்று புனித ஜெரோம் கூறுகிறார். மேலும் தொடர்கிறார், ''கடவுளின் அருள் புனிதர் அனைவரிடையே பகிர்ந்து காணப்படுகிறது. ஆனால் கடவுளின் புனிதத் தன்மையை மரியாள் தன்னில் முழுமையாகத் தாங்கியிருக்கிறார்"

எப்பொழுதெல்லாம் தூய ஆவி மனிதர்களை ஆட்கொள்கிறதோ, கடவுளின் உடனிருப்பு மனிதனோடு சங்கமமகிறதோ, அப்பொழுதெல்லாம் அவர்கள் புனிதமடைகிறார்கள். எசாயாவின் இறை அழைப்பு இதை நமக்கு தெளிவுபடுத்துகிறது(எசா 6:1 முதல்). எசாயா, தூய ஆவியால் தன் பரிசுத்த தன்மையை உணர்ந்ததும் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கிறார் (எசா6:8) அன்னை மரியாளின் அர்ப்பணிப்பு வார்த்தை (இதோ உமது அடிமை) அவரின் மகா பரிசுத்தத்தை உணர்த்துகிறது. ஏனெனில் அன்னை மரியாள் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு கடவுளையே கருவாக தாங்குகிறார் (லூக்1:35) கடவுளின் உடனிருப்பு மரியாவைப் பரிசுத்தப் படுத்துகிறது. படைப்புகள் அனைத்தையும் தனது வார்த்தையால் படைத்த கடவுள் படைப்பின் சிகரமான மனிதன் பரிசுத்தம் அடைய வேண்டும். என்பதற்காக தனது கரம் கொண்டு உருவாக்கிறார்: தனது கைரேகைகள் மனிதனில் நரம்புகளாக வேண்டும் தனது எண்ண ஓட்டமே மனிதனில் இரத்த ஓட்டங்களாக மாற வேண்டும். என்றெண்ணி, தானே குயவன் போல் உடனிருந்து உருவாக்குகிறார். மனித இனம் தன்னைப் போல் தூய்மையாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்


அன்னை மரியாள் புனிதத்தின் முழுமை. மனிதன் புனிதமாவது முடியாத ஒன்றல்ல, ஆனால் ஆண்டவரின் உடனிருப்பை உணர்ந்து இறையருளில் புத்துணர்வோடு பங்கெடுத்தார், மேலும் புனிதமே உருவானாள். நாமும் புனிதமடைய அன்னையைப் பின்பற்றுவோம். புனிதத்தின் பாதையில் பயணிப்போம்.


**– நன்றி : தாயே எங்கள் தஞ்சமே**

# விவிலிய நூல்களும் அர்த்தங்களும்

நம் மீட்பரும் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்துவை குறித்து பழைய மற்றும் புதிய ஏற்பாடு நூல்களில் பலவிதமான பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.அவைகளை நாம் நினைவில் கொள்வது மிகவும் அவசியமானதாகும் இதோ அவ்வார்த்தைகள்

| புத்தகத்தின் பெயர் | குறிப்பிட்டுள்ளவார்த்தைகள் |
|---|---|
| பழைய ஏற்பாடு | |
| ஆகமங்கள் | |
| தொடக்க நூல் | பெண்ணின் வித்து |
| விடுதலைப்பயணம் | பாஸ்காவின் ஆட்டுக்குட்டி |
| லேவியராகமம் | பரிகாரப்பலியானவர் |
| எண்ணிக்கை | அடிக்கப்பட்ட கண்மலை |
| இணைச்சட்டம் | உண்மையான இறைவாக்கினர் |
| யோசுவா ஆகமம் | படைகளின் ஆண்டவர் |
| நீதிபதிகள் ஆகமம் | விடுவிக்கிறவர் |
| ரூத் ஆகமம் | மீட்டு விடுதலை தருபவர் |
| சாமுவேல் ஆகமம் | தள்ளப்பட்ட அரசர் |
| அரசர்கள் | தாவீதின் மகன் |
| குறிப்பேடு | ஆலயத்தை கட்டுபவர் |
| எஸ்ரா ஆகமம் | திரும்பக்கட்டுபவர் |
| நெகேமியா ஆகமம் | திரும்ப தருகிறவர் |
| எஸ்தர் ஆகமம் | மக்களை காக்கிறவர் |
| யோபு ஆகமம் | உயிருள்ள மீட்பர் |
| திருப்பாடல்கள் | இஸ்ரவேலரின் புகழ்ச்சியானவர் |
| நீதி மொழிகள் | கடவுளின் ஞானமானவர் |
| சபை உரையாளர் | மாபெரும் போதகர் |
| இனிமை மிகு பாடல் | பதினாயிரங்களில் சிறந்தவர் |
| எசாயா ஆகமம் | பாடுபடுபவர்,இயேசு |
| எரேமியா ஆகமம் | கண்ணீர் விடுபவர் |
| புலம்பல் ஆகமம் | துக்கம் நிறைந்தவர் |
| எசேக்கியல் ஆகமம் | மகிமையானவர் |
| தானியேல் ஆகமம் | வருகிற மெசியா |
| ஓசேயா ஆகமம் | குணமாக்குபவர் |
| யோவேல் ஆகமம் | இஸ்ரவேலரின் நம்பிக்கையானவர் |
| ஆமோஸ் ஆகமம் | பயிரிடுபவர் |
| ஒபதியா ஆகமம் | மீட்பர் |
| யோனாள் ஆகமம் | உயிர்த்தெழுந்தவர் |
| மீக்கா ஆகமம் | சாட்சியானவர் |
| நாகூம் ஆகமம் | சரிகட்டுபவர் |
| அபக்கூக்கு ஆகமம் | பரிசுத்தர் |
| செப்பனியா ஆகமம் | இஸ்ரவேலரின் அரசர் |
| ஆகாய் ஆகமம் | எல்லாருக்கும் விருப்பமானவர் |
| செக்கரியா ஆகமம் | நீதியுள்ள கிளையானவர் |
| மலாக்கி ஆகமம் | நீதியின் சூரியனானவர் |








புதிய ஏற்பாடு

நற்செய்திகள்

புனித மத்தேயு – யூதருக்கு அரசர்

புனித மாற்கு – பணிவிடையாளர்

புனித லூக்காஸ் –மனுமகன்

புனித அருளப்பர்– இறைமகன்

அப்போஸ்தலர் பணி – விண்ணேற்படைந்த ஆண்டவர்

**D.ஜெஸி சுரேஷ், அழகை**

# அற்புதத் தாயே...



திருமண வரம் தரும் திருக்கல்யாணத் தாயே
தீங்கில்லா வாழ்வதனை அளிப்பவளும் நீயே
தாங்கொண்ணாத் தீமைகளை விலக்குபவள் நீயே
தாழ் நிலை நீக்கி வளம் தரும் எம் கல்யாணத் தாயே

அன்பே என் அழகே என் ஆருயிர் நட்பின் தாயே
இன்பத்தின் ஊற்றே என் இசையே பேரொளியே தாயே
வன் துயர் போக்கும் மா மருந்தே எம் தாயே
என் பேறே இன்புற எம் குறை நீக்கி நிறையருள் தாராயோ

கனியே கற்கண்டே தேனே கலையே எம் பொற்பை நகர் தாயே
பனியே நற்பணிவே பாலே பரிவே எங்கள் அற்புதத் தாயே
இனிய கற்பனையே தூய்மையே வந்தோம் உம் நற்பதம் தாயே
கன்னியே உமை சொற்புனைய யானும் கல்வி கற்றேனே எம் தாயே

மகிழ்வே என் மருக்கொழுந்தே மண முல்லைப் பூவே
நெகிழ்வே உண்டாக்கும் நிறைவே கண்கண்ட வாழ்வே
முகிழ்க்கும் செந்தாமரையே முத்தே பன் மணக்கும் ரோஜாவே
மகிழ் மனத் தூய ஆவி நிரம்பிய வளே எம் கல்யாணத்தாயே

அழகிய பொற்பை நகரினில் வீற்றிருக்கும் எம் அன்னையே
முழங்கிய பறவை ஓசையின் நடுவினிலே உன்னையே
வழங்கிய நின் இறை அருளால் திருத்தலமாக்கிட்ட அன்னையே
தொழுகின்ற மக்கள் கூட்டம் குறை நீங்க ஆசீரளிக்கும் தாயே

– R.**ஜோஸ் அந்தோனி ராஜா**, சென்னை

---

## பொற்பை பரிசுத்த திருக்கல்யாண மாதா திருத்தலத்தில் ஞாயிறு மறைக்கல்வி கொண்டாட்டங்கள்.





31.03.2013 ஈஸ்டர் அன்று மாலை ஆராதனைக்குப்பின் ஆலய மண்டபத்தில் வைத்து பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** தலைமையில் அருட்தந்தை **கிறிஸ்டி,** திருத்தொண்டர் **டேவிட் வளன்,** அருட்சகோதரி **மைக்கிள்** அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன. பல்வேறு வகையான போட்டிகள் நடத்தப்பட்டு அதில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கடந்த கல்வியாண்டில் ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களாக **நிஷா, சித்ரஅனீஸ், ஜெனிபா, மோனிகா, ஜூலியட் அனுஷா, ஜெகன், ஆஷா, சித்ரா, நிர்மலா, அனுஷியா, ரிச்சர்ட் மேரி, அகஸ்டா,** ஆகியோர்கள் பணியாற்றினார்கள். ஞாயிறு மறைக்கல்வி மன்றத் தலைவராக பங்குத் தந்தை அருட்திரு பபியான் ஜோசப் அவர்களும் பொறுப்பாளராக அருட்சகோதரி மைக்கிள் அவர்களும், தொடர்பாளராக நவீன் பிரெட்ரிக் அவர்களும் பணியாற்றினார்கள். இந்நிகழ்ச்சியின் போது பங்குத் தந்தையால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட கிரெடிட் கார்டு சிஸ்டத்தில் கிரெடிட் கார்டு பெற்ற அனைவருக்கும் பங்குத் தந்தை பரிசுகளை வழங்கினார்கள்.

– **நவீன் பிரெட்ரிக்**, பொற்பை


# மாதா காட்சி கொடுத்த செய்திகள்



எண்பது லட்சம் உயிர்களை கொள்ளை கொண்ட முதல் உலகப் போரின் போது 13-5-1917 ல் தேவதாய் போர்த்துக்கல் நாட்டில் உள்ள பாத்திமா என்னும் ஊருக்கு அருகில் மூன்று சிறுவர்களுக்கு தோன்றினாள். பலவித தொல்லைகளால் அவதிப் பட்டுக்கொண்டிருந்த உலகைக் காப்பாற்றும் வழிகளைக் காட்ட அன்னை வந்தாள். மக்கள் எண்ண முடியாத பாவங்களை செய்து கடவுளை மனநோகச் செய்கிறார்கள். மரியாயின் மாசற்ற இருதயத்திற்கும் நிந்தை வருவிக்கிறார்கள். மானிடர் எல்லோரும் தங்கள் வாழ்க்கையை திருத்தி அமைக்க வேண்டும். மேலும் மேலும் தவறு செய்யக்கூடாது.பாவிகளை மனந்திருப்ப செய்ய வேண்டும் பரித்தியாகங்கள் செய்ய வேண்டும்.பரித்தியாகங்கள் செய்யும் பொழுது ஓ என் இயேசுவே , நான் உம்மை நேசிப்பதாலும் பாவிகள் மனந்திரும்பவும், மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு இழைக்கப்படும் நிந்தைக்கு பரிகாரமாகவும் இந்த பரித்தியாகத்தை செய்கிறேன் என்று சொல்ல வேண்டும். உலக சமாதானத்திற்காக பக்தியுடன் அடிக்கடி செபமாலை செபிக்க வேண்டும். ஓ என் இயேசுவே , எங்கள் பாவங்களை மன்னியும், நரக நெருப்பில் விழாமல் எங்களைக்காப்பாற்றும் எல்லா ஆன்மாக்ககளையும், சிறப்பாக உமது இரக்கம் யாருக்கு மிகத் தேவையோ அவர்களையும் மோட்சத்தில் சேர்த்தருளும் என்று செபமாலையில் ஒவ்வொரு பத்து மணி செபத்திற்கு பின்னும் சொல்ல வேண்டும். மரியாயின் மாசற்ற இருதயத்தின் மீது அனைவரும் பக்தி கொண்டிருக்க வேண்டும். ஆறுமுறை காட்சிகளின் போதும் அன்னை விடுத்த செய்தியின் சுருக்கம் இது.

**– ஜெ. ஜெனி,** பொற்பை

# தாமஸ் ஆல்வா எடிசன்



அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர், இளமையில் வறுமையினால் பள்ளி செல்ல வசதியின்றி தன் தாயிடமே கல்வி பயின்றார். மின்சார பல்பு, கிராமஃபோன், சினிமா போன்ற பலவற்றை கண்டுபிடித்தவர். சிறுவயதில் ஏற்பட்ட விபத்தால் காது கேட்கும் திறனை இழந்தவர். டெட்ராய்ட் ரயில் நிலையத்தில் பேப்பர் போடும் சிறுவனாக வாழ்வைத் தொடங்கியவர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருள்களுக்கு காப்புரிமை பெற்றவர்.

இவருக்கு நோபல் பரிசு கிடைக்காமல் போனது வியப்பான உண்மை. ஒருமுறை இவரின் பரிசோதனைக் கூடம் எதிர்பாராதவிதமாக எரிந்து விட்ட போது நான் செய்த தவறுகள் எரிந்து விட்டன என்று இவர் சொன்னது மிகப் புகழ்பெற்ற தன்னம்பிக்கை வாசகம். **Genius is 99% Perspiration and 1% inspiration** என்பது இவருடைய புகழ்பெற்ற வாசகம். இவர் நினைவு நாளன்று அமெரிக்காவில் விளக்குகளை அணைத்து அஞ்சலி செலுத்துகிறார்கள்.

**– கையளவு களஞ்சியம்.**



# புனித ஜோன் ஆப் ஆர்க்

## (1412-1431)

இவர் பிரான்ஸ் நாட்டில் உள்ள தொமரெமி என்னும் கிராமத்தில் 6.04.1412 ம் ஆண்டு பிறந்தார். சிறுவயதிலேயே அதிதூதரான புனித மிக்கேல், புனித கத்தரீன், புனித மார்கரீத் இவர்களது குரல்களைக் கேட்டவர். தொடக்கத்தில் அவர்கள் அளித்த செய்திகள் பொதுவானவை. 1428-ம் ஆண்டு மே மாதம் அந்த குரல்கள் ஒரு கட்டளையைப் பிறப்பித்தன. “உடனே போய், பிரான்ஸ் நாட்டு மன்னருக்கு உதவி செய். அவர் தம் நாட்டை திரும்ப பெற துணை புரிவாராக” என்று கட்டளையிட்டாள்.

அவளுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. திருச்சபை அதிகாரிகளும், அரசனுடைய ஆட்களும் அவளை எதிர்த்தார்கள். கடைசியாக அவளிடம் ஒரு சிறு இராணுவம் ஒப்படைக்கப்பட்டது. அதன் உதவியால் ஜோன் ஆப் ஆர்க் 17.07.1429-ல் ஆர்லியன்ஸ் நகரைக் காப்பாற்றினாள். இன்னொரு நகரைக் காக்கப் போர் செய்கையில் இவளைப் பிடித்து ஆங்கிலேயர்களிடம் கையளித்தார்கள். இவள் தனது சொற்களால் நடுவர்களை திகைக்கச் செய்தாள். என்றாலும் இவளைச் சாவுக்குத் தீர்ப்பிட்டு 30.05.1431-ல் சுட்டு எரித்தனர்.

**சிந்தனை :** தாய் நாட்டைக் காப்பாற்றும்படி இவள் பெரும் தியாகங்கள் செய்தாள். நம் தாய் நாட்டையும் நாம் நேசித்து காப்போம்.

**செபம் :** ஆண்டவரே, தாய்நாட்டை உண்மையாகவே நேசிக்கும் வரத்தை எங்களை அனைவருக்கும் தந்தருளும். ஆமென்.

**– தூயவர்களின் வரலாறு**

---

# தொழிலாளர்களின் பாதுகாவலர் புனித சூசையப்பர்



உழைப்பை பரிசுத்தப்படுத்தவும் உழைக்கிறவர்களுக்கு ஒரு மேல் வரிச்சட்டத்தை, ஒரு பரலோக பாதுகாவலரைக் கொடுக்கும்படியும் 12-ம் பத்திநாத பாப்பரசர் 1955-ல் இந்த விழாவை ஏற்படுத்தினார்.

புனித சூசையப்பர் பொறுமையுடனும் மகிழ்ச்சியுடனும் உழைத்து, தேவைகளை பூர்த்தி செய்து தொழிலாளிகள் அனைவருக்கும் ஒரு மேல் வரிச்சட்டமானார். “திருக்குடும்பத்தின் உறுப்பினர் மூவரும் ஏழைகள் நம்மைப் போல் உழைத்தனர். நமக்கு இருக்கும் கவலைகள் அவர்களுக்கும் இருந்தன. எனவே உழைக்க வேண்டியிருக்கிறதே என்று நாம் விசனப்படக்கூடாது. அதைப்பற்றி மகிழ வேண்டும்” என பதின்மூன்றாம் பாப்பரசர் சிங்கராய பப்பு கூறுகிறார்.

ஆதிப் பெற்றோர் தவறியபின் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்க வேண்டுமென்பது தேவசித்தம். தேவசித்தத்திற்குப் பணிந்து உழைப்போமானால் நமக்கு நித்திய சன்மானம் கிடைக்கும். நாம் உழைக்கும் பொழுது இயேசு, மரி, சூசையப்பர் இவர்களை கண்முன் வைத்து அவர்களைப் போல் சுத்த கருத்துடன் உழைப்போமாக.

சிந்தனை : நீங்கள் உண்டாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாம் கடவுளின் மகிமைக்கெனச் செய்யுங்கள். (1கொரி.18:31)

செபம் : புனித சூசையப்பரே, நானும் நான் நேசிக்கிறவர்களும், என்னைச் சார்ந்தவர்களும் பாவமில்லாமல் வாழ இயேசு நாதரிடம் வேண்டிக்கொள்ளும்.

**– தூயவர்களின் வரலாறு**

# ஹெல்த் கார்னர்



## மணத்தக்காளி

### மருத்துவ மகிமைகள்

அன்பார்ந்த அல்சர் நோயாளிகளே மாம்பழம் சாப்பிட்டு விட்டு கொட்டையைத் தூக்கி எறியாமல் காயப்போட்டு உடைத்து உள்ளிருக்கும் பருப்பைச் சேகரித்துத் தூளாக்கி வையுங்கள். உங்கள் வீட்டு வாசலுக்கு, விற்பனைக்காக வரும் மணத் தக்காளிக் கீரையை வாங்கி அதன் இலைகளைச் சேகரித்து சுத்தம் பண்ணி அம்மியில் அரைத்துச் சாறு எடுங்கள். மாம்பருப்புத் தூளில் மிளகு, தக்காளிச் சாறை கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து நன்றாக அரைத்து சுண்டைக்காய் அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்து காலை, மாலை இரு மாத்திரைகள் வீதம் மோரில் நாற்பது நாட்கள் பருகி வாருங்கள். அல்சருக்கு மருத்துவமனையில் சென்று ஆயிரக்கணக்காக செலவு செய்வதை விட இந்த எளிய மருத்துவத்தில் குடல் புண் என்ற மொரட்டு அல்சர் நோய் தீர்ந்து விடும். இதற்கு பக்க விளைவுகள் எதுவும் கிடையாது என்பது இதன் சிறப்பம்சம்.



# பழங்கள் மேலானது

நாளொரு பழம் பொழுதொரு வகை சாப்பிட்டு வந்தால் அதுவே நல்வாழ்வின் வகை

1 . ஆப்பிள் : பழங்களில் ராஜா. ஆயுள் அதிகரிக்கும். தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டு வந்தால் மருத்துவரிடம் செல்ல வேண்டியஅவசியமே இருக்காது.

2. மாதுளை : வயிறு சம்பந்தமான நோய்கள் நீங்கும். இருமலை நிறுத்தும். அறிவுத்திறன் பெருகும்.

3. ஆரஞ்சு : பழங்களில் ராணி. இன்னொரு தாய்ப்பால். மூன்று கப் பாலுக்கு 1 பழம் இணையானது. இதயநோய் வரவே வராது.

4. திராட்சை : புற்றுநோய் நீங்கும். மலச்சிக்கல், ஆஸ்துமா, ஒற்றைத் தலைவலி, வராது காக்கும். பலமுக ஊக்கி. நல்ல தூக்கம் வரும்.

5. பப்பாளி : பழ வகைகளிலே அதிக சக்தி நிறைந்தது. உயிர்சத்துக்கள் அதிகம். இரத்த விருத்தி, தசை வளர்ச்சி தரும். நரம்புகள் முறுக்கேற்றி சுறுசுறுப்பு தரும்.

6.வாழைப்பழம் : ஏழைகளின் பழம். அதிக சத்துக்கள் நிறைந்தது. வயிறு சம்பந்தமான நோய் நீங்கி புத்துணர்வு தரும். முதியோர் இரவு தோறும் 1 பழம் சாப்பிட நலம் பெறுவர்.

– ஸ்டீபன்ராஜ் ஆசிரியர், கே.டி.சி நகர்.


# புதிய பங்கு உதயம் – கொழுந்தட்டு

பொத்தக்காலன்விளை பங்கின் கிளைப்பங்கான கொழுந்தட்டு 30.05.2013 அன்று நமது மறைமாவட்டத்தின் 111–வது பங்காக உதயமாகிறது. நமது ஆயர் மேதகு இவோன் அம்புரோஸ் அவர்கள் தலைமையேற்று மாலை 5.30 மணிக்கு திருப்பலி நிறைவேற்றி புதிய பங்கை ஆரம்பிக்கின்றார்கள்.

–பங்குத் தந்தை

# வாழ்வு தரும் வார்த்தைகள் – மே – 2013

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | புனித யோசேப்பு | திப. 15:1-6 | யோவா.15:1-8 |
| 2. | புனித அத்தனாசியூஸ் | திப. 15:7-21 | யோவா 15:9-11 |
| 3. | புனிதர் பலிப்பு | 1கொரி 15:1-6 | யோவா 14:6-14 |
| 4. | | திப 16:1-10 | யோவா 15:18-21 |
| 5. | பாஸ்கா ஞாயிறு - 6 | திப.15:1-2,22-29 | |
| | | திவெ21:10-14,22-23 | யோவா 14:23-29 |
| 6. | புனித டோம்னிக்சாவியோ | திப. 16:11-15 | யோவா 15:26-16:4 |
| 7. | | திப. 16:22-34 | யோவா 16:5-11 |
| 8. | | திப 17:15,22-18:1 | யோவா 16:12-15 |
| 9. | | திப 18:1-8 | யோவா 16:16-20 |
| 10. | புனித அந்தோனியுஸ் | திப 18:9-18 | யோவா 16:20-23 |
| 11. | புனித இன்னாசியார் | திப. 18:23-28 | யோவா 16:23-28 |
| 12. | ஆண்டவரின் விண்ணேற்றம் | திப. 1:1-11 எபே.1:17-23 | யோவா 24:46-53 |
| 13. | புனித பாத்திமா | திப. 19:1-8 | யோவா 16:29-33 |
| 14. | புனித மத்தியாஸ் | திப. 1:15-17,20-26 | யோவா 15:9-17 |
| 15. | புனித இசிதோர் | திப. 20:28-38 | யோவா 17:11-19 |
| 16. | புனித உபால்டு | திப. 22:30,23:6-11 | யோவா 17:20-26 |
| 17. | புனித பாஸ்கால் பபியோன் | திப. 25:13-21 | யோவா 21:15-19 |
| 18. | புனித முதலாம் யோவான் | திப. 28:16-20, 30-31 | யோவா 21:20-25 |
| 19. | தூய ஆவியார் பெருவிழா | திப 2:1-11 உரோ.8:8-17 | யோவா 14:15-16,23-26 |
| 20. | புனித பெர்னார்தீன் | சீ.ஞா 1:1-10 | மாற்கு 9:14-29 |
| 21. | புனித கிறிஸ் மெக்கலனஸ் | சீ.ஞா 2:1-11 | மாற்கு 9:30-37 |
| 22. | புனித ரீத்தா | சீ.ஞா 4:11-19 | மாற்கு 9:38-40 |
| 23. | புனித ஜான் பாப்டிஸ்ட் | சீ.ஞா 5:1-8 | மாற்கு 9:41-50 |
| 24. | புனித சகாய அன்னை | சீ.ஞா 6:5-17 | மாற்கு 10:1-12 |
| 25. | புனித 7ம் கிரகோரியார் | சீ.ஞா 17:1-15 | மாற்கு 10:13-16 |
| 26. | மூவொரு கடவுள் விழா | திபா 8:22-31 உரோ 5:1-5 | யோவா 16:12-15 |
| 27. | புனித அகுஸ்தீன் | சீ.ஞா 17:24-29 | மாற்கு 10:17-27 |
| 28. | | சீ.ஞா 35:1-12 | மாற்கு 10:28-31 |
| 29. | புனித மாக்சிலுஸ் | சீ.ஞா 36:1,4-5,10-17 | மாற்கு 10:32-45 |
| 30. | புனித ஜோன் ஆப் ஆர்க் | சீ.ஞா 42:15-25 | மாற்கு 10:46-52 |
| 31. | மரியாளின் சந்திப்பு | செப். 3:14-18 | லூக். 1:39-56 |



# விவிலிய

## குறுக்கெழுத்துப் போட்டி

### பதில்கள் தேடவேண்டிய பகுதி

### மத்தேயு : அதிகாரம் 1 முதல் 25 வரை

விடைகள் வந்து சேரவேண்டிய
கடைசிநாள் : 20.05.2013

**இடமிருந்து வலம்**

1. சல்மோனின் மகன் யார்? 5. யோசேப்பு எந்த நாட்டிற்கு தப்பி ஓடிச் சென்றார்? 9.இயேசுவுக்கு திருமுழுக்கு கொடுத்தவர் யார்? 13. சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்தவர் யார்? 17. தந்தையின் ஆட்சியில் கதிரவனைப் போல் ஒளி வீசுபவர் யார்? 21. நெறிகேடு பெருகுவதால் பலருடைய .......... தணிந்து போகும். 25. என் தந்தையிடமிருந்து ..........பெற்றவர்களே வாருங்கள்.

**வலமிருந்து இடம்**

2. மனாசேயின் தந்தை யார்? 6. தம் குழந்தைகளுக்காக அழுதவர் யார்? 10. எது நெருங்கி வந்து விட்டது? 14. உணவுக்கு உரிமை உடையவர் யார்? 18. நீர் விரும்பியவாறே உமக்கு ............ 22. நடுங்க வைக்கும் தீட்டு குறித்து சொன்ன இறைவாக்கினர் யார்?

**மேலிருந்து கீழ்**

3. நேர்மையாளராக இருந்தவர் யார்? 7. யூதேயாவில் தன் தந்தைக்குப் பின் அரசனானவன் யார்? 11.யாக்கோபு, யோவான் இவர்களின் தகப்பன் யார்? 15. மூன்று நாள் மீனின் வயிற்றில் இருந்தவர் யார்? 19. உயிர்த்தெழுதல் இல்லை என்னும் கருத்துடையவர் யார்? 23. ..........தன் ஒளி கொடாது.

**கீழிருந்து மேல்**

4. கடவுள் நம்முடன் இருக்கிறார் என்னும் பொருள் தரும் பெயர் எது? 8. களஞ்சியத்தில் சேர்க்கப்படுவது எது? 12. உங்கள் ................. எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும். 16. நல்ல விதைகளை விதைப்பவர் யார்? 20. .................ஒருவரே உங்கள் ஆசிரியர். 24. ஐந்து பேர் அறிவிலிகள். ஐந்துபேர் ................... உடையவர்கள்.

## கடந்த மாத போட்டியில் வெற்றி பெற்றவர்கள்விபரம்:

D. **ஜோஸ்பின் மேரி தாசன்**, கவரப்பேட்டை, J. **ஜென்சி சேசுதுரை**, கவரப்பேட்டை, S. **பெனிட்டா டோமினிக்,** கவரப்பேட்டை, A. **அனுஷா அகஸ்டின்**, கவரப்பேட்டை, A. **அன்னபுஷ்பம் ராஜன்,** கவரப்பேட்டை, S. **கீதா சுரேஷ்**, கவரப்பேட்டை, **கபிரியேல் மேரி.** பொற்பை, **குயின்ரோஸ் பாக்கியம்,** பொற்பை, G. **ரெஜினாள் மேரி,** பொற்பை, S. **மேரி லீலா,** பொற்பை, A. **மேரி ஷாலினி**. பொற்பை, D. **அந்தோணி ஏசுதாசன்,** பொற்பை, J. **ஞானமுத்து,** பொற்பை, J. **சித்திரைகல்யாணி**, பொற்பை, P. **சந்தணத் திரவியம்,** பொற்பை, M. **லியோன்,** பொற்பை, J. **ஜெபி ஜோஸ்,** கடகுளம், A. **மரிய மெர்லின்,** அடைக்கலாபுரம், A. **லில்லி தெரஸ்,** அந்தியூர், A. **அந்தோணி ராசையா,** அந்தியூர், A. **செல்ட்டன் பிரகாஷ்,** அந்தியூர், A. **ஜோசப் ஹெலிங்டன்,** அந்தியூர், J. **லீமா ரோஸ்,** கொழுந்தட்டு, A. **அமல பென்சி,** கொழுந்தட்டு, A. **அபிதா,** கொழுந்தட்டு, A. **அருள் தெரஸ் சாலினி,** மாமண்டூர், J. **பீட்டர் ஜோசப்,** சென்னை, M. **டேவிட் தேவராஜ்,** வெள்ளக்கோவில்.

# திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு செபமாலை , 10.15 மணி முதல் 11.30 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு அதனைத் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். மாலை சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெறும். மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6-00 மணிக்கு நவ நாள் திருப்பலியும் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலை திருப்பலி.
- மாதத்தில் முதல் புதன் ஆலய கெபியில் மாலை திருப்பலி.
- மாதத்தில் இரண்டாவது புதன் நான்கு சந்தி கெபியில் மாலை திருப்பலி.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்.
- மற்ற நாட்களில் காலை 6-00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.
- மாதத்தின் முதல் சனி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும்.

## இணையூர் வழிபாடுகள்

**கொழுந்தட்டு**

- வாரம் ஒருமுறை ஞாயிறு திருப்பலி மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலி நடைபெறுகிறது.

**நவமுதலூர்**

- வாரத்திற்கு ஒருமுறை திருப்பலி நடைபெறுகிறது.

**வாலத்தூர்**

- மாதத்திற்கு ஒருமுறை திருப்பலியும் தேவைக்கேற்ப மற்ற நாட்களில் திருப்பலியும் நடைபெறுகிறது.

**திருத்தல அறிவிப்பு விழாமலர் வெளியிட உதவிய ஆசிரியர் குழு, அனைத்துப் பணிக்குழுக்கள், பல்வேறு பணிகளுக்கு உபயம் செய்த இறைமக்கள், விழாவை சிறப்பாக நடத்தித் தந்த உள்ளூர், வெளியூர் பக்தர்களுக்கும் நன்றியையும், பாராட்டுதலையும் சிறப்பிக்கின்றோம்.**

**- பங்குத் தந்தை**

# அடுத்த இதழ்

**ஜூன் மாதம் கல்விச் சிறப்பிதழாக** வெளிவரவிருக்கிறது. எனவே கல்வி **பற்றிய சிறப்புச் செய்திகள், ஆன்மீக கட்டுரைகள், கதைகள்,** துணுக்குச் செய்திகள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் எங்களிடம் வந்து ...

**சேர வேண்டிய கடைசி நாள் : 20-05-2013**

சந்தாதாரராக ஆகுங்கள் ! அன்னையின் அருள் பெறுங்கள் !